# அத்தியாயம் 5



## வெளிநாட்டுத்துறை அபிவிருத்தியும் கொள்கைகளும்





### 5.1 பொதுநோக்கு

உறுதியான வலுவான உலகளாவிய வளர்ச்சியொன்று காணப்பட்ட சூழலொன்றில் பல சவால்களுக்கு மத்தியிலும் 2006 இல் இலங்கையின் வெளிநாட்டுத்துறை தொடர்ந்தும் விரிவடைந்தது. சென்மதி நிலுவையானது தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக மிகையைப் பதிவு செய்துள்ளது. வெளிநாட்டு நேரடி முதலீடானது 1997இல் பதிவு செய்யப்பட்ட உச்ச மட்டத்தினையும் கடந்து 2006இல் உயர்ந்த சாதனை மட்டமொன்றினை அடைந்தது. இலங்கையின் ஏற்றுமதிகள் அவற்றின் முக்கிய ஏற்றுமதி நாடுகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி, இருபுடை வர்த்தக உடன்படிக்கைகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தைகள்


பலவற்றினையும் அடையும் தன்மையில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் புதியதும் உயர் பெறுமதி கொண்டதுமான சிறிய சந்தைகளுக்குள் நுழைய ஏற்றுமதியாளர்கள் எடுக்கும் தொடர்ச்சியான முயற்சிகள் என்பனவற்றின் பயனாக தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. தீவிரமான உலகளாவிய போட்டிக்கிடையிலும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தின் கீழ் ஐரோப்பிய சந்தையை அடையும் வாய்ப்புக்கள் அதிகரித்தமையின் பயனாக ஆடை ஏற்றுமதியாளர்கள் 2006 இல் ஐ.அ.டொலர் 3 பில்லியனுக்கும் கூடுதலான தொகையைப் பெற்றனர். பிராந்திய நாடுகளில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி, பணிகளின் ஏற்றுமதிகளை, குறிப்பாக கப்பற் சரக்கு மாற்றி ஏற்றலின் கையாளல் மற்றும் சுற்றுலாவினை உத்வேகப்படுத்தின. ஆண்டின் பிற்பகுதியில் சுற்றுலா வருகைகளில் பின்னடைவுகள் காணப்பட்ட போதும், ஆண்டுப் பகுதியில் வருவாய் நியதிகளில் காணப்பட்ட பொதுவான செயலாற்றம் கடந்த ஆண்டினை விட முன்னேற்றமொன்றினை காட்டியது. தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்ந்து இரண்டாவதாண்டாக கணிசமாக அதிகரித்தன. உயர்ந்த பன்னாட்டு எண்ணெய் விலைகள் மற்றும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி என்பன காரணமாக இறக்குமதிகள் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சி கண்டன. விதிவிலக்காயமைந்த அண்மைய உயர்ந்த எண்ணெய் விலைகள் வர்த்தக மாற்று விகிதம் 3.5 சதவீதத்தினால் மோசமடைய வழிவகுத்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டமையின் மூலம் வெளிநாட்டு அதிர்வுகளுக்கு ஈடுகொடுத்து வெளிநாட்டுத்துறை மீளெழுச்சியடைவதை வலுப்படுத்தியது. இலங்கைக்கும் அதன் முக்கிய வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையிலான பணவீக்க வேறுபாடுகளினால் ரூபாவானது 5.2 சதவீதத்தினால் தேய்வடைந்து வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் அழுத்தத்தினைக் குறைத்தது. சென்மதி நிலுவையின் மீதான உயர்வடைந்து செல்லும் எண்ணெய் விலைகளின் தாக்கத்தினைத் தணிக்கின்ற குறிக்கோள்களை அடைந்து கொள்ளவும், உள்நாட்டின் வெளிநாட்டுச் செலாவணி சந்தையின் ஏற்ற இறக்கங்களை குறைப்பதற்கும் உயர்ந்து செல்லும் எண்ணெய் விலைகளிலிருந்து நுகர்வோரைப் பாதுகாப்பதற்குமென இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காப்பீட்டு ஒப்பந்தமொன்றினைச் செய்வதற்குரிய வசதிகளை வழங்க மத்திய வங்கி முயற்சிகளை மேற்கொண்டது.

## 5.2 வெளிநாட்டுத்துறைக் கொள்கைகளும் நிறுவன ரீதியான ஆதரவும்

**2006இல், நடைமுறைக் கணக்கின் முழுமையாக மாற்றக்கூடிய தன்மை, மட்டுப்படுத்தப்பட்ட மூலதனக் கணக்குக் கட்டுப்பாடுகள் மற்றும் சுதந்திரமாக மிதக்க விடப்படுகின்ற செலாவணி வீதம் என்பனவற்றின் வலுவான அத்திவாரத்தின் காரணமாக பன்னாட்டு வர்த்தகமும் நிதியமும் சுதந்திரமானதும் தாராளமானதுமான பொருளாதார சூழலில் தொடர்ந்தும் தொழிற்பட்டது.** வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அதிர்வுகளுக்கு மத்தியிலும், சுதந்திரமான சந்தைப் பொருளாதாரக் கொள்கைகள், ஆரோக்கியமான முதலீட்டுச் சூழல் மற்றும் மேம்பாடடைந்த கொடுப்பனவு முறைமை என்பன அண்மைய ஆண்டுகளில் நாடு உயர் வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதனை இயலச் செய்தன. வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையானது உள்நாட்டு உற்பத்திகளின் அதிகரித்த போட்டித் தன்மையூடாகவும் பரஸ்பர நன்மை பயக்கும் வர்த்தகம் மற்றும் முதலீட்டு உடன்படிக்கைகளூடாக புதிய சந்தைகளைக் கைப்பற்றுவதன் மூலமும் உற்பத்திகளைப் பன்முகப்படுத்துவதனை இலக்காகக் கொண்டிருக்கிறது.

**ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச திறைசேரி முறிகளில் வெளிநாட்டவர்கள் முதலீடு செய்ய சந்தர்ப்பம் வழங்கப்பட்டமையின் மூலம் 2006இல் மூலதனக் கணக்கு மேலும் திறந்து விடப்பட்டது.** சலுகை ரீதியான நிதியிடலின் கிடைப்பனவிற்குப் புறம்பாக, பிரதேச ரீதியாக சமநிலையான வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு இன்றியமையாததான முக்கிய உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களை

வரைபடம் 5.1 வெளிநாட்டு வர்த்தகம்




நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட கால வெளிநாட்டு நிதியிடல் அரசிற்குத் தேவைப்படுகின்றது. ஆகவே, இலங்கை அதன் வெளிநாட்டு நிதியிடல் இடைவெளியினை நிரப்புவதற்கு பன்னாட்டு மூலதனச் சந்தையில் அதன் பிரசன்னத்தினை நிலை நிறுத்துவது அவசியமாகவுள்ள அதேவேளையில் வெளிநாட்டுப்படுகடனின் உறுதித்தன்மையினையும் உணர்ந்திருக்கிறது. இது தொடர்பாக, 2006 நவெம்பர் 01 ஆம் நாள் தொடக்கம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்காக ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிச்சந்தையினை எந்தவொரு குறிப்பிட்ட நேரத்திலும் வெளிநிற்கும் திறைசேரி முறிகளின் மொத்தப் பெறுமதியில் ஆகக் கூடியது 5 சதவீதம் கொண்ட உச்ச எல்லையுடன் அரசாங்கம் திறந்தது. இதன்படி இலங்கைப் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவினால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியம், பரஸ்பர நிதியம் மற்றும் பிரதேச நிதியம், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள கம்பனிகள் மற்றும் வெளிநாட்டுப் பிரசைகள் ஆகியோர் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளில் முதலீடு செய்ய தற்போது அனுமதிக்கப்பட்டனர். நிதியம் சடுதியாக வெளிச் செல்வதினால் தோன்றும் இடர்நேர்வுகளைத் தணிக்கும் பொருட்டு, மத்திய வங்கி ஐ.அ.டொலர்களில் குறித்துரைக்கப்பட்ட சிறப்பு நிதியமொன்றினை கட்டியெழுப்புவதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. வெளிநாட்டுச் செலாவணிக்கு ஏற்படும் எந்த ஒரு கேள்வியும் இதிலிருந்து ஈடுசெய்யப்படும்.

## அட்டவணை 5.1 சென்மதி நிலுவைப் பகுப்பாய்வு வெளிப்படுத்துகை (அ)

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(ஆ) | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(ஆ) |
| வர்த்தக நிலுவை | -1,406 | -1,539 | -2,243 | -2,516 | -3,370 | -134,706 | -148,324 | -227,171 | -253,082 | -350,037 |
| ஏற்றுமதிகள் | 4,699 | 5,133 | 5,757 | 6,347 | 6,883 | 449,855 | 495,426 | 583,967 | 638,276 | 716,579 |
| இறக்குமதிகள் | 6,106 | 6,672 | 8,000 | 8,863 | 10,253 | 584,561 | 643,750 | 811,138 | 891,359 | 1,066,615 |
| பணிகள், தேறிய | 295 | 399 | 419 | 338 | 257 | 28,224 | 38,443 | 42,735 | 34,043 | 26,660 |
| பெறுகைகள் | 1,268 | 1,411 | 1,527 | 1,540 | 1,625 | 121,340 | 136,123 | 154,746 | 154,877 | 168,802 |
| கொடுப்பனவுகள் | 974 | 1,012 | 1,108 | 1,202 | 1,368 | 93,115 | 97,680 | 112,011 | 120,833 | 142,142 |
| வருமானம், தேறிய | -252 | -172 | -204 | -299 | -388 | -24,167 | -16,535 | -20,688 | -30,049 | -40,353 |
| பெறுகைகள் | 75 | 170 | 157 | 35 | 311 | 7,201 | 16,385 | 15,813 | 3,629 | 32,457 |
| கொடுப்பனவுகள் | 328 | 341 | 360 | 335 | 700 | 31,368 | 32,920 | 36,501 | 33,678 | 72,810 |
| பொருட்கள் பணிகள் மற்றும் வருமானம் (தேறிய) | -1,364 | -1,312 | -2,028 | -2,478 | -3,502 | -130,648 | -126,416 | -205,124 | -249,088 | -363,730 |
| தனியார் மாற்றல்கள், தேறிய | 1,097 | 1,205 | 1,350 | 1,736 | 2,068 | 104,980 | 116,350 | 136,672 | 174,542 | 215,1 |
| பெறுகைகள் | 1,287 | 1,414 | 1,564 | 1,968 | 2,326 | 123,183 | 136,475 | 158,291 | 197,968 | 241,919 |
| கொடுப்பனவுகள் | 190 | 209 | 214 | 233 | 257 | 18,202 | 20,125 | 21,619 | 23,426 | 26,817 |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) | 31 | 36 | 30 | 93 | 101 | 2,982 | 3,441 | 3,038 | 9,300 | 10,524 |
| நடைமுறைக் கணக்கு | -236 | -71 | -648 | -650 | -1,334 | -22,686 | -6,625 | -65,414 | -65,246 | -138,10 |
| மூலதன, நிதியியல் கணக்குகள் | 444 | 722 | 631 | 1,224 | 1,807 | 40,639 | 69,723 | 60,539 | 123,866 | 190,751 |
| மூலதன கணக்கு | 65 | 74 | 64 | 250 | 291 | 6,219 | 7,146 | 4,974 | 25,108 | 30,289 |
| மூலதன மாற்றல்கள் (தேறிய) | 65 | 74 | 64 | 250 | 291 | 6,219 | 7,146 | 4,974 | 25,108 | 30,289 |
| பெறுகைகள் | 71 | 81 | 71 | 257 | 299 | 6,782 | 7,768 | 5,643 | 25,863 | 31,169 |
| கொடுப்பனவுகள் | 6 | 6 | 7 | 7 | 8 | 563 | 622 | 669 | 755 | 879 |
| நிதியியல் கணக்கு | 379 | 648 | 567 | 974 | 1,517 | 34,420 | 62,577 | 55,565 | 98,757 | 160,462 |
| நீண்டகாலம் : | 326 | 722 | 680 | 798 | 906 | 28,911 | 69,721 | 69,805 | 80,391 | 95,074 |
| நேரடி முதலீடு தேறிய | 185 | 201 | 227 | 234 | 451 | 17,716 | 19,450 | 22,826 | 23,505 | 46,971 |
| வெளிநாட்டு நேரடி முதலீடு | 181 | 171 | 217 | 234 | 451 | 17,281 | 16,557 | 21,948 | 23,505 | 46,971 |
| தனியார் மயமாக்கல் பெறுகைகள் | 5 | 30 | 10 | - | - | 435 | 2,893 | 878 | - | - |
| தனியார் நீண்டகாலம் (தேறிய) | -21 | -33 | 14 | 11 | -35 | -2,039 | -3,201 | 2,270 | 1,054 | -3,591 |
| உட்பாய்ச்சல்கள் | 115 | 101 | 169 | 197 | 139 | 11,007 | 9,738 | 17,503 | 19,739 | 14,465 |
| வெளிபாய்ச்சல்கள் | 136 | 134 | 155 | 186 | 174 | 13,046 | 12,939 | 15,233 | 18,685 | 18,056 |
| அரச, நீண்ட காலம் (தேறிய) | 162 | 554 | 439 | 553 | 491 | 13,233 | 53,472 | 44,709 | 55,832 | 51,694 |
| உட்பாய்ச்சல்கள் | 542 | 913 | 771 | 747 | 932 | 51,843 | 88,106 | 78,299 | 75,309 | 97,690 |
| வெளிபாய்ச்சல்கள் | 380 | 359 | 331 | 194 | 441 | 38,610 | 34,634 | 33,590 | 19,477 | 45,996 |
| குறுங்காலம்: | 53 | -75 | -112 | 176 | 610 | 5,509 | -7,145 | -14,240 | 18,366 | 65,387 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் | 25 | 2 | 11 | 60 | 51 | 2,443 | 209 | 1,109 | 6,103 | 5,377 |
| தனியார் குறுங்கால : | 68 | 19 | 28 | 16 | -30 | 6,548 | 1,877 | 2,514 | 1,640 | -3,066 |
| வர்த்தக வங்கித் சொத்துக்கள் (தேறிய) | 104 | -94 | -354 | -223 | 297 | 6,893 | -9,090 | -45,367 | -19,669 | 23,789 |
| வர்த்தக வங்கிப் பொறுப்புக்கள் (தேறிய) | -145 | -2 | 202 | 323 | 293 | -10,375 | -141 | 27,504 | 30,292 | 39,287 |
| அரச குறுங்காலம் (தேறிய) | - | - | - | - | - | - | - | - | - | - |
| பெறுமதி சீராக்கங்கள் | 93 | - | - | - | - | 8,900 | - | - | - | - |
| பிழைகளும் தவறுகளும் | 38 | -148 | -189 | -72 | -270 | 9,197 | -14,487 | -2,599 | -10,494 | -15,426 |
| திரண்ட நிலுவை (இ) | 338 | 502 | -205 | 501 | 204 | 36,051 | 48,610 | -7,474 | 48,125 | 37,221 |
| நாணய அசைவுகள் (இ) | -338 | -502 | 205 | -501 | -204 | -36,051 | -48,610 | 7,474 | -48,125 | -37,22 |
| செலவாணி வீதம் ரூ/ஐ.அ.டொ | | | | | | 95.66 | 96.52 | 101.19 | 100.50 | 103.96 |
| மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான விகிதம் சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | | | | | |
| நடைமுறைக் கணக்கு | -8.5 | -8.4 | -11.2 | -10.7 | -12.5 | -8.5 | -8.4 | -11.2 | -10.7 | -12.5 |
| கொடைகளற்ற நடைமுறைக் கணக்கு | 1.4 | -0.4 | -3.2 | -2.8 | -4.9 | -1.4 | -0.4 | -3.2 | -2.8 | -4.9 |
| | -1.6 | -0.6 | -3.4 | -3.2 | -5.3 | -1.6 | -0.6 | -3.4 | -3.2 | -5.3 |


(அ) இவ்விபரம் பன்னாட்டு நாணய நிதியத்தின் சென்மதி நிலுவைக் கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லும் விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் 1994இலிருந்து வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகள் உள்நாட்டு வங்கித் தொழில் முறையின் பகுதியொன்றாக கருதப்பட்டுள்ளன.

(ஆ) தற்காலிகமானவை

(இ) நாணயத்துறையின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் ஆண்டின் இறுதி செலவாணி வீதங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.2 சென்மதி நிலுவை




**வர்த்தக தாரளப்படுத்தல் கொள்கை தொடர்ச்சியாகப் பின்பற்றப்படுவது 2005இன் 4.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2006இல் 4.2 சதவீதமான குறைந்த சராசரி தீர்வை வீதத்தினை விளைவித்தது.** முக்கிய வர்த்தகக் கொள்கைக் கருவியான இறக்குமதித் தீர்வை 2006இல் 0, 2.5, 6, 15 மற்றும் 28 சதவீதமான ஐந்து பிரிவு வரியமைப்பினை உள்ளடக்கியுள்ளது. இதன்படி, அரசாங்கம் அடிப்படை மூலப்பொருட்கள் மீதான தீர்வையினை ஆகக் குறைந்த தீர்வைப் பிரிவிலும் இடைநிலை மற்றும் முடிவுப் பொருட்களுக்கு நடுத்தர மற்றும் உயர் வீதங்களிலும் தொடர்ந்தும் பேணும். குறிப்பாக இன்றியமையாத உணவு விடங்கள் மற்றும் இன்றியமையாதன அல்லாத நுகர்வுப் பொருட்கள் தொடர்பாக 2006இல் பல்வேறு தீர்வை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. 2006இல் இன்றியமையாதன அல்லாத பொருட்களின் இறக்குமதிக்கான கடன்வழங்கலை முன்மதியுடைய வழிமுறைகள் குறைக்கின்ற வேளையில் நிதியியல் முறையின் உறுதிப்பாட்டினை மேம்படுத்தும் விதத்தில் இவ்விடயங்களில் பலவும் நாணயக்கடிதம் திறக்கப்படும் நேரத்திலும் ஏற்றுக் கொள்ளலுக்கெதிரான ஆவணங்களின் நியதிகளின் மீது ஆவணங்களை வருவிப்பதற்கு முன்பும் 50 சதவீதமான அளவு வைப்புத் தேவைப்பாடுகளின் கீழ் கொண்டு வரப்பட்டன. 2006இல் இறக்குமதிகளுக்கு ஏற்புடைத்தான ஏனைய விதிப்புக்களாக சுங்கத் தீர்வை மீதான மேலதிகக் கட்டணம் (சுங்கத் தீர்வையில் 10%) பெறுமதிசேர் வரி, துறைமுகம் மற்றும் வானூர்தி நிலைய வரி, சமூக பொறுப்பாண்மை வரி, கலால் தீர்வை (மதுவகை, புகையிலை உற்பத்திகள் மற்றும் ஊர்திகளுக்கானவை) மற்றும் இன்றியமையாதன அல்லாத நுகர்வுப் பொருட்களுக்கான தீர்வை என்பன காணப்பட்டன.

**மட்டுப்படுத்தப்பட்ட உள்நாட்டுக் கேள்வியுடன் சிறியதொரு பொருளாதாரத்தினைக் கொண்டிருப்பதனால் உலகளாவிய சந்தைகளுடன் உள்நாட்டுப் பொருளாதாரத்தினை அதிகளவிற்கு ஒருங்கிணைப்பதனை நோக்கமாகக் கொண்ட வெளிநாட்டு வர்த்தக தொடர்புகளை மேற்கொள்வதனைத் தவிர இலங்கைக்கு வேறு தெரிவுகள் எதுவுமில்லை.** இது என்றும் அதிகரித்துவரும் உலகளாவிய கேள்வி, தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் தேர்ச்சி மற்றும் அறிவின் மாற்றல் போன்றவற்றின் மூலம் நாடு நன்மைகளைப் பெற உதவும். இலங்கை பல்புடை வர்த்தக முறைமைக்கு உறுதியான கடப்பாடுகளைக் கொண்டிருந்ததுடன் உலக வர்த்தக அமைப்பினால் தொடங்கப்பட்ட சுதந்திர வர்த்தக கலந்துரையாடல்களிலும் தொடர்ந்தும் தீவிரமாகப் பங்கேற்றது.

**2006 இல் இலங்கை அதன் பிராந்திய மற்றும் இருபுடை வர்த்தக ஒழுங்குகளில் மேலும் முன்னேற்றங்களைக் கண்டது.** தென் ஆசிய சுதந்திர வர்த்தகப் பிராந்தியத்தின் கீழ் வர்த்தகத்தினை தாராளமயப்படுத்தும் முதற் கட்டம் 2006 யூலையில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2001 இல் சீனா நுழைந்ததன் பின்னர், பாங்கொக் உடன்படிக்கை என முன்னர் அழைக்கப்பட்ட ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கைக்கு புத்துயிரூட்டும் செயற்பாடுகள் தொடங்கப்பட்டன. இருபுடை வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வை ஒழிப்பு மற்றும் தீர்வைக் குறைப்பு ஆகிய வழிகளில் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள் வலுவான பன்னாட்டுப் போட்டியினை எதிர்த்து நிற்பதற்கும் பல்நூலிழை உடன்படிக்கைக்கு பின்னைய யுகத்தில் வெளிநாட்டுத்துறையில் வளர்ச்சி உத்வேகத்தினைப் பேணுவதற்கும் உதவியது. இந்திய - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் தீர்வை தாராளமயப்படுத்தலின் இரண்டாம் கட்டத்தின் படி, 2003 மாச்சிலிருந்து எதிர்க்கணியப் பட்டியலிலுள்ள பொருட்கள் நீங்கலாக, இலங்கையிலிருந்தான அனைத்துப் பொருட்களும் பூச்சிய தீர்வைக்குட் பட்டிருக்கிறது. எனினும், இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிகள் ஒரு சில பொருட்களின் மீதே பெருமளவிற்குக் குவிந்து காணப்படுகின்றது. இலங்கையிலும் எதிர்க் கணியப்பட்டியலிலுள்ள பொருட்கள் நீங்கலாக இந்தியாவிலிருந்தான அனைத்துப் பொருட்களின் மீதுமான அதன் தீர்வைகளை 70 சதவீதத்தினால் குறைத்திருக்கிறது. 2006 இல் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையிலான இருவழி வர்த்தகம் ஐ.அ.டொலர் 2.7 பில்லியனுக்கு 11 சதவீதத்தினால் அதிகரித்தது. 2006 இல், அனைத்தையுமுள்ளடக்கிய பொருளாதார பங்குடமை உடன்படிக்கையின் கீழ் இரண்டு சுற்று தொழில்நுட்ப மட்டத்திலான பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இப் பேச்சுவார்த்தைகள் பொருட்களிலுள்ள வர்த்தகம், பணிகளிலுள்ள வர்த்தகம், நிதியியல் பணிகளிலுள்ள வர்த்தகம், வான் பணிகள், முதலீடுகள், இரட்டைவரி விதிப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு என்பன தொடர்பானதாகக் காணப்பட்டன. 2007இன் இறுதிக்கு முன்னர் பரஸ்பரம் நன்மை பயக்கும் விதத்தில், விரைவாக நடைமுறைப்படுத்தும் விதமாக தற்பொழுது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையினை இரு நாடுகளும் வலியுறுத்தின. பாகித்தான் - இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் 2006இல் பாகித்தானுக்கான இலங்கை ஏற்றுமதிகளின் மீது 67 சதவீதமாக தீர்வைக் குறைப்பு பெறப்பட்டது. பாகித்தானுக்கான ஏற்றுமதிகள் 46 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்து பழவகை, தேயிலை, இறப்பர், தேங்காய் மற்றம் மர உற்பத்திகளின் உயர்ந்த செயலாற்றத்தினைப் பிரதிபலித்தது.

**முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட தீர்வைச் சலுகைகள் ஏற்றுமதிகளைப் பன்முகப்படுத்தவும் ஐரோப்பிய ஒன்றியப் பிராந்தியத்திலுள்ள சந்தைகளை அடையவும் உதவின.** தீவிரமான போட்டி காணப்பட்ட போதும், முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + தீர்வைச் சலுகைகளின் காரணமாக, ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஆடை ஏற்றுமதிகள் 17.3 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், மூலப்பிரமாணங்களின் கடுமையானதும் சிக்கலானதுமான விதிகளின் காரணமாக ஆடைச்சலுகைகளில் இலங்கை பயன்படுத்திக் கொண்ட வீதம் 2006 இல் குறைவாகக் காணப்பட்டது. தற்போதைய முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + திட்டம் 2008 திசெம்பரில் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மீளாய்வு செய்யப்பட அட்டவணையிடப்பட்டுள்ளது.

**அரசாங்கம் பரந்த ரீதியான ஒழுங்குகளைப் பயன்படுத்தி ஏற்றுமதியாளர்களுக்கு தொடர்ந்தும் ஆதரவளித்தது.** இச்செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த முக்கிய நிறுவனங்களாக முதலீட்டுச் சபை, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை, இலங்கை ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை கட்டளைகள் நிறுவனம் என்பன காணப்பட்டன. தரப்படுத்தல், தரம் மற்றும் உற்பத்திகளை சான்றுபடுத்தல் உட்பட இரு நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்திற்கு

வசதியளிப்பதற்காக 2006 ஒகத்தில் இந்தியக் கட்டளைகள் பணியகமும் இலங்கைக் கட்டளைகள் நிறுவனமும் இருபுடை ஒத்துழைப்பு உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டன.

**தோற்றம் பெற்றுவரும் அழுத்தத்தினை எதிர்த்து நிற்கும் விதத்தில் புடவைகள் மற்றும் ஆடைகள் துறையின் போட்டித்தன்மையினை அதிகரிக்கும் நோக்குடன் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.** இவை இடைநிலைப் பொருட்களின் உள்ளூர் நிரம்பலர்களுக்காக பெறுமதிசேர் வரியில் குறைப்பு, முன்னேற்றங் கண்ட தொழில்நுட்பத்தினை பெறுவதற்காக தீர்வையற்ற சலுகைகள், தொழில்நுட்ப மேம்பாடுகளுக்காக நிதியியல் உதவி, இலகுபடுத்தப்பட்ட பெறுமதிசேர் வரிப் பிரயோகங்கள், ஆடைகளை வாங்குகின்ற அலுவலகங்களுக்கு பூச்சியவீத பெறுமதிசேர் வரி அமைப்பு, புடவைகள், ஆடைகளுக்கான கல்லூரி நிறுவப்படுகின்றமை, மற்றும் ஆடைக் கைத்தொழிலின் நிலக்குத்தான ஒருங்கிணைப்பிற்கு வசதியளிக்கும் விதத்தில் செயற்பாடாத புடவை அலகுகளை மீளத்திறத்தல் என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. பன்னாட்டுச் சந்தையில் காணப்படும் வலுவான போட்டியினைக் கருத்திற் கொண்டு செயற்பாடாத அலகுகளில் பாரிய முதலீடுகளை மேற்கொள்ள முக்கிய ஏற்றுமதியாளர்கள் புதிய ஈடுபாடுகளை கொண்டிருப்பது கைத்தொழிலின் நல்ல எதிர் காலத்திற்கு கட்டியம் கூறுவதுடன் வளர்ந்து வரும் நம்பிக்கையையும் பரந்தளவில் எடுத்துக் காட்டுகின்றது. ஆடைக் கைத்தொழிலானது 'குறைகளற்ற ஆடைகள்' என்ற தலைப்பில் அவர்களது புதிய பிரச்சாரங்களை மேற்கொண்டதன் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் பெரும் முன்னேற்றத்தினை எய்துமளவிற்கு வலிமையைக் கொண்டிருந்தது. இவை கைத்தொழிலில் சிறுவர் தொழிலாளர்களை வேலைக் கமர்த்துவதில்லை என்ற ஒழுக்க முறையிலும் அதேவேளை பெண்கள் உரிமையிலும் முக்கிய கவனத்தைச் செலுத்தியிருந்தன. இப்பிரச்சாரத்தின் முக்கிய நோக்கம் 2008இல் சீனாவின் ஆடைகள் ஏற்றுமதிகள் மீது ஐக்கிய

**சிறப்புக் குறிப்பு 6**

## பொருளாதார தாக்கங்களும் மூலதனக் கணக்கை மேலும் திறந்துவிடுவதற்கான முற்தேவைப்பாடுகளும்

மூலதனக் கணக்கைத் திறந்துவிடுதல் என்பது ஒரு நாடானது நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் மூலதனம் சுதந்திரமாக நகராத மூடிய மூலதனக் கணக்கு அமைப்பிலிருந்து மூலதனம் சுதந்திரமாக நுழையும், வெளிச்செல்லும் திறந்த மூலதனக் கணக்கு அமைப்பிற்கு மாறும் செயல்முறையாகும். மூலதனக் கணக்கைத் திறந்துவிடுதல் பொதுவாக பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி, சொத்துப் பட்டியலின் பன்முகப்படுத்தலூடாக இடர்நேர்வுப் பகிர்வை வசதிப்படுத்தி, வினைத்திறனுடனான இலாபத்தை ஏற்படுத்தும். தோற்றம் பெற்றுவரும் சந்தைப் பொருளாதாரங்கள் பல போதுமானமற்ற உள்நாட்டுச் சேமிப்புக்களின் காரணமாக உருவாகும் முதலீட்டுத் தேவைகளின் தேவையைப் பொறுத்து மூலதனக் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கடப்பாடுகளைத் தளர்த்தி உள்நாட்டு நிதியியற் சந்தைகள் மீதான கட்டுப்பாடுகளை தளர்த்தின. எனினும், மூலதனக் கணக்கு திறந்துவிடப்பட்டதன் பின்பு பல நாடுகளில் நிதியியல் நெருக்கடிகள் அறிவிக்கப்பட்டன. இவை இக் கருதுகோளின் குறைபாடு காரணமாக அன்றி, வங்கித் தொழில் மற்றும் நிதியியற் துறையில் காணப்பட்ட பலயீனம், உரிய மதிநுட்பமான ஒழுங்கு விதிகள் இல்லாமை மற்றும் மோசமான மேற்பார்வை என்பவற்றினாலேயே ஏற்பட்டன.

இலங்கை மூலதன உட்பாய்ச்சல் மற்றும் வெளிப்பாய்ச்சலின் நகர்வை 1978 இல் தெரிவு அடிப்படையில் அனுமதித்தது. நடைமுறையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில் மயமாக்கத்திற்குத் தேவையான வெளிநாட்டு நேரடி முதலீடுகளை ஈர்ப்பதற்கும் விரிவடைந்து செல்லும் சேமிப்புக்கள் - முதலீடுகள் இடைவெளியை நிதியிடுதல் மற்றும் வெளிநாட்டு கடன் வழங்குனரிடமிருந்து பெற்ற குறைந்த செலவுடைய நிதியங்களைக் கொண்டு உள்நாட்டுக் கம்பனிகள் அவற்றின் உற்பத்தியை விரிவாக்க உதவி செய்தல் என்பவற்றைப் பொறுத்து உள்நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடு மற்றும் பட்டியலிடப்பட்ட முதலீடுகள் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்டன. அதேவேளை, இடர்நேர்வைக் குறைக்கும் பொறிமுறையாக, இலங்கையரின் வெளிச் செல்லும் முதலீடுகள் மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகள் ஒவ்வொரு விடயத்தினதும் நன்மைகளைப் பொறுத்து ஒவ்வொரு விடயம் விடயமாக அனுமதிக்கப்பட்டன. இக் கொள்கை மாற்றங்களிலிருந்து கிடைத்த பயன் காரணமாக தேறிய வெளிநாட்டு மொத்த நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 1979இல் ஐ.அ.டொலர் 49 மில்லியனுக்கு அதிகரித்தன. இப்போக்கு மேலும் தொடர்ந்து, 2006இல் ஐ.அ.டொலர் 604 மில்லியனை அடைந்தது. இதன் விளைவாக, நாட்டின் கைத்தொழில் தளம் மற்றும் ஏற்றுமதித் தளம் கடந்த ஆண்டுகளில் பன்முகப்படுத்தப்பட்டு விரிவாக்கப்பட்டதுடன், தற்போது முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட சகல தொழில் முயற்சிகளும் நாட்டின் மொத்த ஏற்றுமதிகளின் 73 சதவீதமளவுக்கும் மொத்த கைத்தொழில் ஏற்றுமதிகளின் 89 சதவீதத்துக்கும் வகைகூறின. கிட்டத்தட்ட 400,000 மக்கள் முதலீட்டுச் சபையால் ஒப்புதலளிக்கப்பட்ட தொழில் முயற்சிகளில் நேரடியாகத் தொழிலுக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் பெரும் எண்ணிக்கையான மக்கள் தொடர்பான துறைகளில் முறைமுகமாக தொழிலாற்றுகின்றனர். பட்டியலிடப்பட்ட முதலீட்டு உட்பாய்ச்சல்களும் படிப்படியாக அதிகரித்து 2006இல் ஐ.அ.டொலர் 354 மில்லியன் கொண்ட சாதனை மட்டத்தை அடைந்தது. இச்சாதகமான அபிவிருத்திகளுடன், துறைமுகப் பணிகள் மற்றும் நிதியியற் பணிகள் போன்ற ஏனைய வர்த்தகம் தொடர்பான பணிகளும் கணிசமானளவில் விரிவடைந்தன.

பங்கு மூலதனம் மற்றும் படுகடன் செலவைக் குறைப்பதன் மூலம் உயர் முதலீட்டை தூண்டுவதனூடாக பொருளாதார வளர்ச்சியை மேலும் வசதிப்படுத்தல், கூடிய போட்டியினூடாக நிதியியல் முறைமையின் வினைத்திறனை முன்னேற்றல். மற்றும் இலங்கை முதலீட்டாளர்களுக்கு அவர்களின் தொழிற்பாடுகளை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் விரிவாக்குவதற்கான சந்தர்ப்பங்களை வழங்கல் என்பவற்றுக்காக மூலதனக் கணக்கை மேலும் திறந்துவிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இலங்கை படிப்படியாக நடுத்தர வருமானம் உடைய நாடாக தகுதி பெறுவதால் நாட்டுக்குக் கிடைக்கக்கூடிய சலுகை ரீதியிலான நிதியிடல் மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளுடன் இந்நிலைமை மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை, வெளிநாட்டு முதலீடுகளுடனான சில உள்நாட்டு தனியார்துறை தொழில் முயற்சிகள் பன்னாட்டுச் சந்தைகளில் வெற்றிகரமாக போட்டியிடக் கூடிய உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களின் இயலாற்றலை வெளிப்படுத்தின. கடந்த ஆண்டுகளில் அரசின் நிதியியற் தேவைகள் அலுவல்சார் வெளிநாட்டு நிதியிடலை விஞ்சியுள்ளதால் அரசுக்குக் கூட்டுக்கடன்கள் மற்றும் வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகளை மிதமான அளவில் நாட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து கடன்பெறல் இலாபகரமானதால் தற்போது சில தனியார்துறை தொழில் முயற்சியாளர்கள் கூட வெளிநாட்டுக் கடன்பாடுகளை நாடுகின்றனர். இக் கம்பனிகளில் சில பன்னாட்டு சந்தையிலிருந்து மூலதனத்தை அதிகரிக்கும் அவர்களின் இயலாற்றலை ஏற்கனவே வெளிப்படுத்தியுள்ளன. இவ் அபிவிருத்திகள் பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து சார்பு ரீதியில் குறைவான செலவில் நிதியங்களைத் திரட்டுவதற்கு ஏனைய ஆற்றல்மிக்க கம்பனிகளுக்குள்ள உள்ளார்ந்த வளத்தை எடுத்துக்காட்டுகிறது.

**சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)**

## பொருளாதாரச் சிக்கல்களும் மூலதனக் கணக்கை மேலும் திறந்துவிடுவதற்கான முற்தேவைப்பாடுகளும்

### மூலதனக் கணக்கைத் திறப்பதில் அண்மைய வழிமுறைகள்

2006இல் அரசு, இலங்கை பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவால் ஒப்புதலளிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியங்கள், பிரதேச நிதியங்கள் சமவாய நிதியங்கள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிக் குழுமங்கள் மற்றும் வெளிநாட்டு பிரசைகள் எந்த நேரத்திலும் ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற மொத்தப் பெறுமதியின் 5 சதவீதம் வரையான முறிகளை கொள்வனவு செய்து வைத்திருப்பதற்கும் அனுமதி வழங்கியது. இவ்வாண்டில், வதியாத இலங்கையர்களுக்கும், வெளிநாட்டு நாணயத்தில் வருமானம் பெறும் இலங்கையிலும், வெளிநாட்டிலும் வதியும் இலங்கை நிபுணர்களுக்கும் வெளிநாட்டு நாணயத்தில் குறித்துரைக்கப்பட்ட நாட்டைக் கட்டியெழுப்பும் முறிகளை அரசு வழங்கியது. இவ்வழிமுறைகள் பல வழிகளில் பொருளாதாரத்துக்கு நன்மையளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசின் கடன்படும் செலவானது வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு முதலீட்டாளர்களிடமிருந்தான போட்டித் தன்மையான விலைக் குறிப்பீட்டினூடாக குறைக்கப்படும். இத்துடன், நாடு முறி வழங்கலினூடாக வெளிநாட்டுச் செலாவணியையும் பெறக்கூடும். இது நாட்டின் அலுவல்சார் ஒதுக்குகளை அதிகரித்து வெளிநாட்டு அதிர்வுகளுக்கு நாடு தாக்குப்பிடிக்கும் தன்மையை மேலும் பலப்படுத்தும். எனினும், இவ் உட்பாய்ச்சல்கள் திடீர் மூலதன வெளிப்பாய்ச்சல்களுக்கு இட்டுச் செல்லக்கூடிய எந்தவொரு எதிர்பாரா நிகழ்வுகளையும் காத்திரமான வகையில் எதிர்கொள்வதற்கு மதிநுட்பத்துடன் முதலீடு செய்து முகாமைப்படுத்த வேண்டும். இவ்வழிமுறைகள், இலங்கையின் படுகடன் கருவிகளில் முதலீடு செய்வதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஆர்வத்தை அதிகரிப்பதன் மூலம் பன்னாட்டு மூலதனச் சந்தைகளில் நிதியங்களைத் திரட்டுவதற்கான நாட்டின் முயற்சிகளையும் வசதிப்படுத்தலாம். அட்டவணை சி 6.1 இலங்கையிலும், இந்தியாவிலும் தெரிந்தெடுக்கப்பட்ட மூலதனக் கணக்கு கட்டுப்பாடுகளின் தற்போதைய நிலையை ஒப்பிடுகிறது.

### வருங்காலத்தில் திறப்பதற்கு உள்ளார்ந்த வளத்தைக் கொண்ட துறைகள்

உள்நோக்கிய வெளிநாட்டு நேரடி முதலீடுகள் சுதந்திரமாக அனுமதிக்கப்பட்ட போதிலும் பணத்தைக் கடன்வழங்கல், அடகுவைத்தல், ஐ.அ.டொலர் 1 மில்லியனுக்குக் குறைவான மூலதனத்துடனான சில்லறை வர்த்தகம் போன்ற குறிப்பிட்ட வியாபாரங்களில் வெளிநாட்டு முதலீடுகள் அனுமதிக்கப்படவில்லை. சில விடயங்களில் குறிப்பிட்ட வியாபாரத்தில் வெளிநாட்டு உடைமை மீது (வழங்கப்பட்ட பங்கு மூலதனத்தின் 40 சதவீதம்வரை மட்டும் அனுமதிக்கப்பட்டுள்ளது) கட்டுப்பாடு காணப்படுகிறது.[1] பாதுகாப்பு மற்றும் சூழல் கரிசனை காரணமாக உரிய அமைச்சுக்களின் ஒப்புதலை கடுமையாக வேண்டி நிற்கும் ஏனைய சில துறைகள் காணப்படுகின்றன.[2] இக் கட்டுப்பாடுகள் தொடர்ந்திருக்கக் கூடிய வேளையில் மேலும் தாராளமயமாக்கலுக்கான உள்ளார்ந்த வளம் கொண்ட துறைகளாக வெளிச்செல்லும் வெளிநாட்டு நேரடி முதலீடுகள், வெளிநாட்டுப் பங்குச் சந்தைகளில் பங்குகளின் பட்டியலிடல் மற்றும் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளால் மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுக் கடன்பாடுகள், இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகளின் பங்குகளை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடல் மற்றும் உள்நாட்டுக் கம்பனிகளின் படுகடன் கருவிகளுக்கு உதவுதொகை வழங்குவதற்கு வதியாதோருக்கான அனுமதி என்பன விளங்கின. இவ் உள்ளார்ந்த வளம்மிக்க துறைகளை உரிய அதிகாரிகள் மேலும் பரீட்சித்து உரியநேரம் வரும்போது பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### மூலதனக் கணக்கை மேலும் திறப்பதற்கான முற்தேவைகள்

உள்நாட்டு நிதியியல் முறைமை மீதான தாக்கத்தை உள்ளடக்கிய பெருமளவிலான மூலதனப் பாய்ச்சல்கள், செலாவணிவீத தளம்பல் மற்றும் பேரண்டப் பொருளாதார முகாமைத்துவத்தின் போட்டித் தன்மையும் சிக்கலும் என்பவற்றை பரிசீலணை செய்யும் அதே வேளையில் அவ்வாறான கொள்கைகளை நோக்கி நகர்வதற்கு முன் சில அடிப்படை முன் நிபந்தனைகளைக் கவனமாகப் பரிசீலனை செய்வது அத்தியாவசியமாகும். இவை, ஊகிக்கத்தக்க மூலதனக் பாய்ச்சல்களைக் குறைக்கக்கூடிய வட்டிவீத வேறுபாடுகளை ஒடுங்கச் செய்வதற்கு உலகளாவிய வட்டிவீதங்களை நோக்கி உள்நாட்டு வட்டி வீதங்களை ஒருமுகப்படுத்தல் மற்றும் நீண்ட தவணை மூலதனப் பாய்ச்சல்களை ஊக்கப்படுத்தல் என்பவற்றை உள்ளடக்கும். ஆகவே, நாட்டில் குறைவானதும் உறுதியானதுமான பணவீக்கத்தைப் பேண வேண்டியது அவசியமாகும். வருங்கால நிதியியல் நெருக்கடிகளைத் தவிர்ப்பதற்கு மேலும் திறப்பதற்கு முன் பயன்தரும் முறையில் அமுல்படுத்தும் பொறி முறை மற்றும் அதிகரித்த இடர்நேர்வு முகாமைத்துவ நடைமுறைகளைக் கொண்ட மதிநுட்பமானதும் பொருத்தமானதுமான ஒழுங்குமுறைப்படுத்தல் கட்டமைப்பையும் உரிய முறையில் வைத்திருக்க வேண்டும். நடைமுறையிலிருக்கும் ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் பயன்பாட்டின் கவனமான பரீட்சிப்பு, நாட்டிலுள்ள பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மற்றும் கம்பனி வங்கித் தொழில் மற்றும் ஏனைய நிதியியல் நிறுவனங்களின் சிறந்த செயலாற்றம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்முறையை வரிசைப்படுத்துவதற்கான தெளிவான வழிகாட்டலைத் தயாரிப்பதும் அத்தியாவசியமாகிறது.

---

1 அவ்வாறான வியாபாரங்களாவன (i) இலங்கையின் ஏற்றுமதிகள் பன்னாட்டு ரீதியில் தீர்மானிக்கப்பட்ட அனுமதிப் பங்கு கட்டுப்பாடுகளுக்குட்படும்போது பொருட்களின் உற்பத்தி (ii) தேயிலை, இறப்பர், தெங்கு, கொக்கோ, அரிசி, சீனி மற்றும் வாசனைப் பொருட்களை உற்பத்தி செய்தலும் முதன்மைப் பதனிடலும் (iii) சுரங்கமகழ்தலும், புதுப்பிக்க முடியாத தேசிய வளங்களின் முதன்மைப் பதனிடலும் (iv) உள்நாட்டு மரத்தைப் பயன்படுத்தும் மரத்தை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள் (v) மீன்பிடி (ஆள்கடல்மீன்பிடி) (vi) பொது மக்கள் தொடர்பூட்டல் (vii) கல்வி (viii) பொருட்களை கப்பலில் ஏற்றல் (ix) பிரயாண முகவர்கள் (x) கப்பற்படுத்தும் முகவர்கள்

2 இவை (i) வான் போக்குவரத்து (ii) கரையோரக் கப்பற்படுத்தல் (iii) 1990ஆம் ஆண்டின் கைத்தொழில் ஊக்குவிப்புச் சட்டம் இலக்கம் 46இன் இரண்டாம் அட்டவணையிலுள்ள கைத்தொழில் பொறுப்புக்கள் (ஆயுதங்கள், சுடுகலன்கள், வெடிபொருள், இராணுவ ஊர்திகள் மற்றும் கருவி,வானூர்தி மற்றும் ஏனைய இராணுவ வன்பொருள் என்பவற்றைத் தயாரிக்கும் எந்தவொரு கைத்தொழிலும்; நஞ்சுகள், போதைப்பொருள், குடிவகை, அபாயகரமான மருந்துகளும் கலவைகளும், தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்கள் என்பவற்றைத் தயாரிக்கும் எந்தவொரு கைத்தொழிலும்) (iv) பாரிய அளவில் இயந்திரமயமாக்கப்பட்ட இரத்தினக்கற்களின் சுரங்கமகழ்வு (v) லொத்தர்கள் போன்ற துறைகளை உள்ளடக்குகின்றன.

**சிறப்புக் குறிப்பு 6 (தொடர்ச்சி)**

**பொருளாதாரச் சிக்கல்களும் மூலதனக் கணக்கை மேலும் திறந்துவிடுவதற்கான முற்தேவைப்பாடுகளும்**



**அட்டவணை சி 6.1**

**இலங்கையிலும் இந்தியாவிலுமுள்ள மூலதனக் கணக்குக் கட்டுப்பாடுகள்**

| விடயம் | | இலங்கை | இந்தியா |
|---|---|---|---|
| 1. வெளிநாட்டு நேரடி முதலீடு | வெளிநாடு | ஒவ்வொரு விடயத்தின் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டவை | கம்பனிகள் பதிவு செய்யப்பட்ட பங்குடைமையாளர் நிறுவனங்கள் அவற்றின் தேறியசெல்வத்தில் 200 சதவீதமான அளவை வெளிநாடுகளிலுள்ள வியாபாரச் செயற்பாடுகளில் முதலீடு செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர். |
| | உள்நாடு | சில துறைகளைத் தவிர அநேகமான துறைகள் 100 சதவீதம்வரை திறந்து விடப் பட்டுள்ளன (அடிக் குறிப்புக்கள் 1 மற்றும் 2 ஐப் பார்க்கவும்) | முதலீடுகள் தடைசெய்யப்பட்ட குறிப்பிட்ட துறைகளைத் தவிர்ந்த துறைகளில் துறைகளுக்கான உச்சமட்டம்வரை தன்னியக்க வழியிலான முதலீட்டின் கீழ் அனுமதிக்கப்படுகின்றன. |
| 2. பங்குகளிலான வெளிநாட்டு முதலீடு | வெளிநாடு | அனுமதிக்கப்படவில்லை | பரஸ்பர நிதியங்கள் உள்ளடங்கலாக ஒப்புதலளிக்கப்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் மொத்தமாக ஐ.அ.டொலர் 3 பில்லியன்வரை முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர்.<br>தனிநபர்கள் இந்தியன் ரிசேவ் வங்கியின் ஒப்புதலின்றி நிதியியல் ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொலர் 50,000 வரை பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். |
| | உள்நாடு | குறிப்பிட்ட விலக்குகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வதியாதோர் பங்குகளின் 100 சதவீதம்வரை முதலிடலாம் | இந்தியாவின் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனைச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு நிறுவன ரீதியான முதலீட்டாளர்களும் வதியாத இந்தியர்களும் ஒப்புதலிக்கப்பட்ட வரையறை வரை பட்டியலிடப்பட்ட முதலீட்டுத் திட்டத்தின் கீழ் பங்குகளைக் கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப் படுகின்றனர். |
| 3. அரச பிணையங்களிலான முதலீடு | வெளிநாடு | அனுமதிக்கப்படவில்லை | பரஸ்பர நிதியங்கள் உள்ளடங்கலாக ஒப்புதலிக்கப்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் மொத்தமாக ஐ.அ.டொலர் 3 பில்லியன்வரை அனுமதிக்கப்படுகின்றனர் |
| | உள்நாடு | இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக் குழுவால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வெளிநாட்டு நிதியங்கள் ரூபாவில் குறித்துரைக் கப்பட்ட திறைசேரி முறிகளின் வெளிநின்ற மொத்தத்தில் 5 சதவீதம் வரை கொள்வனவு செய்வதற்கு அனுமதிக்கப் பட்டுள்ளனர் | வெளிநாட்டு நிதியங்கள் மொத்தமாக ஐ.அ.டொலர் 2.6 பில்லியன்வரை பெறுமதியான அரசபிணையங்கள் மற்றும் திறைசேரி உண்டியல்களில் முதலீடு செய்வதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வரையறை 2007 மார்ச்சில் இருந்து ஐ.அ.டொலர் 3.2 பில்லியனிற்கு அதிகரிக்கப்படும். |
| 4. வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் | | வெளிநாட்டு வர்த்தகக் கடன்பாடுகள் ஒவ்வொரு விடயத்தின் அடிப் படையில் அனுமதிக்கப்படுகின்றன. | கம்பனிகள் ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொலர் 750 மில்லியன் வரையான வெளிநாட்டு வர்த்தக கடன்பாடுகளைப் பயன்படுத்தலாம். |
| 5. தனி நபர்களால் மேற்கொள்ளப்படும் நிதியியல் மூலதன மாற்றல்கள் | | அனுமதிக்கப்படவில்லை | தனிநபர்கள் நடைமுறை மூலதனக் கணக்கு கொடுக்கல் வாங்கல்களுக்காக நிதியியல் ஆண்டொன்றுக்கு ஐ.அ.டொலர் 50,000 வரை சுதந்திரமாக அனுப்புவதற்கு அனுமதிக்ககப்பட்டுள்ளனர். |

**அட்டவணை 5.2 சராசரி இறக்குமதித் தீர்வை சேகரிப்பு வீதம் (அ)**

| விடயம் | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(ஆ) |
|---|---|---|---|---|---|
| **நுகர்வுப் பொருட்கள்** | **13.1** | **13.5** | **10.4** | **10.4** | **11.2** |
| உணவும் குடிபானங்களும் | 14.1 | 14.2 | 8.5 | 9.6 | 10.7 |
| அரிசி | 32.9 | 29.3 | 4.9 | 10.6 | 23.4 |
| மா | 12.3 | 11.5 | 7.2 | 3.8 | 33.7 |
| சீனி | 14.4 | 16.8 | 4.6 | 1.5 | 1.9 |
| கோதுமையும் மெசுலினும் | 0.0 | 0.0 | 0.1 | 1.1 | 5.6 |
| பாலும் பால் உற்பத்திகளும் | 11.9 | 12.2 | 7.9 | 10.2 | 9.6 |
| கருவாடு | 7.9 | 10.8 | 5.9 | 5.9 | 5.0 |
| ஏனைய மீன் உற்பத்திகளும் | 6.8 | 7.9 | 10.0 | 9.8 | 7.8 |
| ஏனையவை | 22.9 | 22.3 | 17.4 | 22.0 | 24.2 |
| உணவல்லா நுகர்வுப் பொருட்கள் | 12.1 | 13.0 | 12.2 | 11.1 | 11.7 |
| உந்து ஊர்திகளும் துவிச்சக்கர வண்டிகளும் | 23.3 | 22.1 | 21.1 | 18.9 | 18.3 |
| வானொலிப் பெட்டிகளும் தொலைக் காட்சிப் பெட்டியும் | 8.6 | 8.9 | 9.4 | 13.6 | 7.1 |
| இறப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 27.9 | 26.0 | 25.8 | 26.2 | 19.2 |
| மருந்தாக்கல் பொருட்கள் | 0.6 | 0.6 | 0.6 | 0.5 | 0.3 |
| ஏனையவை | 9.4 | 9.2 | 8.9 | 8.7 | 10.3 |
| **நடுத்தரப் பொருட்கள்** | **1.6** | **1.5** | **1.9** | **1.9** | **1.4** |
| வளமாக்கி | 0.4 | 2.6 | 3.1 | 2.7 | 2.5 |
| மசகெண்ணெய் | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| ஏனைய பெற்றோலிய உற்பத்திகள் | 0.8 | 0.8 | 0.9 | 0.9 | 1.3 |
| இரசாயன கூறுகளும் கலவைகளும் | 1.1 | 2.2 | 2.6 | 2.0 | 1.8 |
| நிறமூட்டல் தோல் பதனிடல் வர்ணமிடல் | 4.0 | 4.6 | 4.5 | 4.4 | 2.6 |
| தாளும் தாள் மட்டையும் | 5.2 | 5.4 | 6.0 | 6.0 | 2.4 |
| புடவைகள் | 0.1 | 0.1 | 0.0 | 0.1 | 0.1 |
| ஏனைய நடுத்தரப் பொருட்கள் | 4.3 | 3.3 | 4.3 | 4.5 | 3.3 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **5.5** | **7.2** | **6.1** | **5.8** | **5.2** |
| கட்டடப்பொருட்கள் | 7.4 | 7.7 | 9.0 | 7.8 | 9.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 11.0 | 12.9 | 11.9 | 9.7 | 7.0 |
| பொறிகளும் கருவிகளும் | 3.7 | 5.6 | 3.2 | 3.3 | 3.2 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 3.8 | 4.6 | 5.0 | 5.3 | 3.4 |
| **மொத்தம்** | 4.8 | 5.3 | 4.5 | 4.3 | 4.2 |

(அ) சீராக்கப்பட்ட மொத்த இறக்குமதிப் பெறுமதியின் சதவீதமாக உண்மையான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்பு

(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள் : இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட பல்வேறு கட்டுப்பாடுகளையும் நீக்கும் வேளையில் தோன்றும் பன்னாட்டு போட்டித்தன்மையினை எதிர்கொள்வதற்கு தயாராக இருப்பதேயாகும்.


## 5.3 பொருட்களின் வர்த்தகம், வர்த்தக நிலுவை மற்றும் வர்த்தக மாற்று விகிதம்

### ஏற்றுமதிச் செயலாற்றம்

**2006இல் ஏற்றுமதிகள் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தமைக்கு** ஏற்றுமதிகளின் தரத்திலேற்பட்ட முன்னேற்றம், ஏற்றுமதி சென்றடையும் நாடுகளின் பொருளாதாரச் செழிப்பு, உள்நாட்டுப் பொருளாதாரமானது உலகப் பொருளாதாரம் மற்றும் வர்த்தக இராசதந்திர முறைகளுடன் இணைக்கப்பட்டதன் மூலமாக சந்தையை அணுகும் வசதிகள் உயர்வடைந்தமை மற்றும் அரசாங்கத்தினாலும் முக்கிய ஏற்றுமதியாளர்களினதும் எடுக்கப்பட்ட முயற்சிகள் என்பனவற்றிலிருந்து கிடைத்த பயன்களே காரணமாகும். 2006இல் ஏற்றுமதி வருவாய்கள் ஐ.அ.டொலர் 6,883 மில்லியனுக்கு 8.4 சதவீதத்தினால் அதிகரித்தன. இது, மேம்பட்ட விலைகள் மற்றும் அளவுகளின் இணைந்த விளைவாக ஏற்பட்டதாகும்.

**2006இல் ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பெரும்பாலும் மாற்றமின்றிக் காணப்பட்டது.** 2006இல் கைத்தொழில் ஏற்றுமதிகள் 8.8 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன. தீவிரமான உலகளாவிய போட்டி காணப்பட்ட போதும் 2006இல் ஆடைகளின் ஏற்றுமதிகள் 6.4 சதவீதத்தினால் அதிகரித்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஆடை ஏற்றுமதிகள் சிறிதளவு வீழ்ச்சியடைந்த போதும் முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை திட்டத்தினால் வழங்கப்பட்ட சலுகைகள் பகுதியளவில் பயன்படுத்திக் கொள்ளப்பட்டமையினால் ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதிகள் 18.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. ஐரோப்பிய ஒன்றியத்திற்கான ஏற்றுமதியில் ஏற்பட்ட வளர்ச்சி ஐக்கிய இராச்சியம் இத்தாலி, சேர்மனி, பிரான்சு மற்றும் நெதர்லாந்து ஆகியவற்றின் சந்தைப்பங்குகளில் ஏற்பட்ட விரிவாக்கத்தில் பிரதிபலித்தது. 2006இல் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளின் ஏற்றுமதிகள் அதிகரித்த போதும், துறையானது, மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட உயர்ந்ததும் தீவிரமானதுமான தளம்பல்களினால் பாதிக்கப்பட்டது. 2005இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்த உணவு மற்றும் குடிபான ஏற்றுமதிகள் 2006இல் இந்தியாவிற்கான வனஸ்பதி ஏற்றுமதிகள் குறைவடைந்தமையின் காரணமாக பாதிக்கப்பட்டது. 2006இல் வேளாண்மை ஏற்றுமதிகள் தேயிலை மற்றும் இறப்பரின் உயர்ந்த செயலாற்றத்தின் மூலம் வழிநடத்தப்பட்டன. கென்யாவில் காணப்பட்ட வரட்சியின் காரணமாக பன்னாட்டுச் சந்தையில் காணப்பட்ட நிரம்பல் பற்றாக்குறை, சுதந்திர நாடுகளின் பொதுநலவாயம் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் காணப்பட்ட பெருமளவு கேள்வி என்பனவற்றின் பயனாக தேயிலை முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த செயலாற்றத்தினைக் காட்டியது. எனினும், யோர்டான், ஈராக் மற்றும் லிபியா ஆகியவற்றிற்கான குறைந்த ஏற்றுமதியின் முக்கிய காரணமாக 2006இல் பெறுமதி கூட்டப்பட்ட தேயிலை ஏற்றுமதிகள் வீழ்ச்சியடைந்தன. 2006இல் இறப்பர் ஏற்றுமதிகளும் விலைகள் மற்றும் அளவு ஆகிய இரண்டின் நியதிகளிலும் அதிகரிப்புக்களைப் பிரதிபலித்தன. உயர்வடைந்த எண்ணெய் விலைகளின் காரணமாக 2006இல் இறப்பரின் விலைகள்

**வரைபடம் 5.3 முக்கிய வகைகளின்படி ஏற்றுமதிகளின் பங்கு**



**அட்டவணை 5.3** **வர்த்தகச் சுட்டெண்கள் (அ)**

1997= 100

| வகை | 2005 | | | 2006 (ஆ) | | | வளர்ச்சி வீதம் (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் | பெறுமதிச் சுட்டெண் | அளவுச் சுட்டெண் | அலகு ஒன்றிற்கான விலைச்சுட்டெண் |
| **ஏற்றுமதிகள்** | | | | | | | | | |
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **108.6** | **116.1** | **93.5** | **121.7** | **122.6** | **99.3** | **12.1** | **5.6** | **6.2** |
| தேயிலை | 112.4 | 117.3 | 95.8 | 122.2 | 124.0 | 98.6 | 8.7 | 5.7 | 2.9 |
| இறப்பர் | 59.7 | 53.9 | 110.7 | 118.4 | 77.0 | 153.8 | 98.2 | 42.8 | 38.9 |
| தெங்கு | 96.3 | 102.3 | 94.1 | 105.3 | 112.4 | 93.7 | 9.3 | 9.8 | -0.4 |
| ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகள் | 126.5 | 155.6 | 81.3 | 134.2 | 148.7 | 90.2 | 6.1 | -4.4 | 11.0 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **143.7** | **145.4** | **98.9** | **156.1** | **150.7** | **103.6** | **8.6** | **3.7** | **4.7** |
| புடவைகளும் ஆடைகளும் | 127.0 | 134.4 | 94.5 | 135.2 | 141.2 | 95.7 | 6.4 | 5.1 | 1.3 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 134.5 | 54.4 | 247.4 | 192.2 | 69.3 | 277.3 | 42.9 | 27.4 | 12.1 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 180.3 | 177.1 | 101.8 | 197.6 | 178.5 | 110.7 | 9.6 | 0.8 | 8.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | 160.4 | 115.5 | 138.8 | 152.4 | 120.7 | 126.3 | -5.0 | 4.5 | -9.0 |
| இரத்தினக்கற்கள் | 144.9 | 115.7 | 125.3 | 143.9 | 119.9 | 120.0 | -0.7 | 3.6 | -4.2 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 365.0 | 144.1 | 319.8 | 264.8 | 130.3 | 203.2 | -27.5 | -9.6 | -36.5 |
| **மொத்த ஏற்றுமதிகள்** | **136.6** | **138.0** | **98.9** | **148.1** | **143.6** | **103.1** | **8.4** | **4.1** | **4.2** |
| **இறக்குமதிகள்** | | | | | | | | | |
| **நுகர்வுப் பொருட்கள்** | **138.6** | **159.8** | **86.7** | **164.4** | **175.9** | **93.5** | **18.6** | **10.1** | **7.8** |
| உணவும் குடிபானங்களும் | 95.2 | 101.3 | 94.0 | 118.0 | 108.7 | 108.5 | 23.9 | 7.3 | 15.5 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 201.7 | 244.9 | 82.4 | 231.8 | 273.5 | 84.8 | 14.9 | 11.7 | 2.9 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **168.7** | **139.3** | **121.1** | **191.6** | **146.2** | **131.0** | **13.5** | **5.0** | **8.2** |
| வளமாக்கி | 203.3 | 135.7 | 149.8 | 247.1 | 162.1 | 152.5 | 21.6 | 19.4 | 1.8 |
| மசகெண்ணெய் | 292.7 | 110.7 | 264.4 | 389.4 | 118.6 | 328.3 | 33.0 | 7.1 | 24.2 |
| ஏனைய பெற்றோலியம் | 320.4 | 132.5 | 241.8 | 378.0 | 143.5 | 263.5 | 18.0 | 8.3 | 9.0 |
| இரசாயனக்கூறுகளும் கலவைகளும் | 182.8 | 143.2 | 127.6 | 191.8 | 144.2 | 133.0 | 4.9 | 0.7 | 4.2 |
| கோதுமையும் மெசுலீனும் | 102.6 | 109.5 | 93.7 | 144.1 | 152.1 | 94.8 | 40.5 | 38.9 | 1.1 |
| புடவைகள் (ஆடைகள் உட்பட) | 110.4 | 131.8 | 83.8 | 111.5 | 133.7 | 83.4 | 1.0 | 1.5 | -0.5 |
| பிளாத்திற்குகள் | 201.7 | 176.3 | 114.4 | 225.4 | 172.3 | 130.8 | 11.8 | -2.3 | 14.3 |
| வைரங்கள் | 192.5 | 139.4 | 138.1 | 193.2 | 116.6 | 165.8 | 0.4 | -16.4 | 20.0 |
| ஏனையவை | 183.4 | 181.6 | 101.0 | 212.6 | 202.7 | 104.9 | 15.9 | 11.6 | 3.9 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **141.0** | **180.0** | **78.3** | **169.3** | **195.9** | **86.4** | **20.1** | **8.8** | **10.4** |
| கட்டடப்பொருட்கள் | 186.6 | 190.9 | 97.8 | 201.0 | 197.3 | 101.9 | 7.7 | 3.4 | 4.2 |
| போக்குவரத்துக் கருவிகள் | 156.3 | 104.8 | 149.2 | 179.5 | 102.0 | 175.9 | 14.9 | -2.6 | 17.9 |
| பொறியும் கருவியும் | 115.7 | 204.4 | 56.6 | 144.7 | 231.3 | 62.5 | 25.0 | 13.2 | 10.5 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 171.8 | 127.6 | 134.6 | 243.3 | 126.0 | 193.1 | 41.6 | -1.2 | 43.4 |
| **மொத்த இறக்குமதிகள்** | **151.1** | **152.8** | **98.9** | **174.8** | **163.6** | **106.9** | **15.7** | **7.1** | **8.0** |
| வர்த்தக மாற்று விகிதம் | | | 100.0 | | | 96.5 | | | -3.5 |

(அ) ஐ.அ.டொலர் நியதிகளில்
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கை மத்திய வங்கி

வரலாற்றிலேயே மிக உயர்ந்த மட்டங்களுக்கு உயர்வடைந்தன. எனினும், இயற்கை இறப்பரின் விலைகள், எண்ணெய் விலைகள், வானிலை தன்மைகள், காப்பீட்டு நிதியங்களின் செயற்பாடு, சீனா மற்றும் ஐக்கிய அமெரிக்காவிலிருந்தான கேள்வி, உலகளாவிய உற்பத்தி மற்றும் பொருட்பட்டியல்கள் என்பனவற்றிற்கு பதிலிறுத்தும் விதத்தில் உயர்ந்தளவிற்கு தளம்பலுற்றன. ஏனைய வேளாண்மை ஏற்றுமதிகளும் அதிகரித்து பழவகைகள், மிளகு, கறுவா, தயாரிக்கப்படாத புகையிலை என்பனவற்றின் உயர்ந்த ஏற்றுமதிகளைப் பிரதிபலித்தன. இவ்வுற்பத்திகளுக்கான வெளிநாட்டுக் கேள்வி இந்திய இலங்கை சுதந்திர வர்த்தக ஒழுங்குகளின் கீழ் தீர்வையின்றி இந்திய சந்தையினை அடைய முடிந்தமையின் மூலமும் மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வியின் மூலமும் தூண்டப்பட்டது.

## இறக்குமதிச் செயலாற்றம்

**அதிகரித்த கேள்வி மற்றும் உயர்ந்த இறக்குமதி விலைகள் ஆகிய இரண்டினையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2006இல் இறக்குமதிகள் ஐ.அ.டொலர் 10,253 மில்லியனுக்கு 15.7 சதவீதத்தினால் அதிகரித்தன.** தயாரிப்பு மற்றும் செய்முறை நடவடிக்கைகளின் விரிவாக்கம் நீண்ட நாள் பாவனை நுகர்வுப் பொருட்களுக்கான கேள்வி முன்னெப்பொழுதுமில்லாத விதத்தில் விரிவடைந்தமை, ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டிவீத அமைப்பு என்பன அனைத்து மூன்று வகைகளுக்குமான அதாவது இடைநிலை, முதலீட்டு மற்றும் நுகர்வுப் பொருட்களுக்கான இறக்குமதிக் கேள்வியினை 2006இல் உயர்வடையச் செய்தது.

**2006இல் பெற்றோலிய உற்பத்திகளை முனைப்பாகக் கொண்ட இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகள் 12.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தன.** முதல் மூன்று காலாண்டுப் பகுதியிலும் இடைநிலைப்

**அட்டவணை 5.4** ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2005 பெறுமதி ஐ.அ.டொ மில் | 2005 பங்கு % | 2006 (அ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2006 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் (அ) ஐ.அ.டொ மில் | வளர்ச்சி வீதம் (அ) % | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ) % |
|---|---|---|---|---|---|---|---|
| **வேளாண்மை ஏற்றுமதிகள்** | **1,153.8** | **18.2** | **1,292.7** | **18.8** | **138.9** | **12.0** | **25.8** |
| தேயிலை | 810.2 | 12.8 | 881.2 | 12.8 | 71.0 | 8.8 | 13.2 |
| இறப்பர் | 46.9 | 0.7 | 93.1 | 1.4 | 46.2 | 98.5 | 8.6 |
| தெங்கு | 113.3 | 1.8 | 123.8 | 1.8 | 10.5 | 9.3 | 1.9 |
| உள்ளீட்டு உற்பத்திகள் | 48.8 | 0.8 | 52.8 | 0.8 | 4.0 | 8.2 | 0.7 |
| ஏனையவை | 64.5 | 1.0 | 71.0 | 1.0 | 6.5 | 10.1 | 1.2 |
| சிறு வேளாண்மை உற்பத்திகள் | 183.4 | 2.9 | 194.6 | 2.8 | 11.2 | 6.1 | 2.1 |
| **கைத்தொழில் ஏற்றுமதிகள்** | **4,948.4** | **78.0** | **5,383.4** | **78.3** | **435.0** | **8.8** | **81.2** |
| உணவு, குடிபானங்கள், புகையிலை | 318.2 | 5.0 | 363.9 | 5.3 | 45.7 | 14.4 | 8.5 |
| புடவைகளும் ஆடைகளும் | 2,894.5 | 45.6 | 3,080.3 | 44.8 | 185.8 | 6.4 | 34.7 |
| பெற்றோலிய உற்பத்திகள் | 130.9 | 2.1 | 187.2 | 2.7 | 56.3 | 43.0 | 10.5 |
| இறப்பர் உற்பத்திகள் | 394.4 | 6.2 | 427.5 | 6.2 | 33.1 | 8.4 | 6.2 |
| மட்பாண்ட உற்பத்திகள் | 47.1 | 0.7 | 47.4 | 0.7 | 0.3 | 0.6 | 0.1 |
| தோல், பயணப்பொருடகளும் காலணியும் | 43.8 | 0.7 | 40.6 | 0.6 | -3.2 | -7.3 | -0.6 |
| பொறிகயும் கருவியும் | 329.9 | 5.2 | 394.3 | 5.7 | 64.4 | 19.5 | 12.0 |
| வைரம் மற்றும் ஆபரணம் | 277.9 | 4.4 | 327.0 | 4.8 | 49.1 | 17.7 | 9.2 |
| ஏனைய கைத்தொழில் ஏற்றுமதிகள் | 511.7 | 8.1 | 515.2 | 7.5 | 3.5 | 0.7 | 0.7 |
| **கனிப்பொருள் ஏற்றுமதிகள்** | **143.3** | **2.2** | **136.2** | **1.9** | **-7.1** | **-5.0** | **-1.3** |
| இரத்தினக்கற்கள் | 120.3 | 1.8 | 119.5 | 1.7 | -0.8 | -0.7 | -0.1 |
| ஏனைய கனிப்பொருள் ஏற்றுமதிகள் | 23.0 | 0.4 | 16.7 | 0.2 | -6.3 | -27.4 | -1.2 |
| **பாகுபடுத்தப்படாதவை (ஆ)** | 101.2 | 1.6 | 70.4 | 1.0 | -30.8 | -30.4 | -5.7 |
| **மொத்த ஏற்றுமதிகள் (இ)** | **6,346.7** | **100.0** | **6,882.7** | **100.0** | **536.0** | **8.4** | **100.0** |
| ஆண்டுச் சராசரி செலாவணி வீதம் | 100.50 | | 103.96 | | | | |

(அ) தற்காலிகமானவை
(ஆ) மீள் ஏற்றுமதிகள் உட்பட
(இ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
மற்றும் ஏனைய பெற்றோலிய ஏற்றுமதியாளர்கள்
இலங்கை மத்திய வங்கி
தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபை

பொருட்களின் இறக்குமதியில் ஏற்பட்ட மிகக் கூடுதலான அதிகரிப்பு பொற்றோலியம் மீதான உயர்ந்த செலவினத்தின் காரணமாகவே முக்கியமாக ஏற்பட்டது. இக்காலப்பகுதியில், மசகெண்ணெய் விலைகள் 32.8 சதவீதத்தினால் அதிகரித்தன. எனினும், பன்னாட்டு எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட மெதுவான தன்மையின் விளைவாக 2006இன் நான்காவது காலாண்டுப் பகுதியில் 4.3 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தன. மொத்த இறக்குமதிகளில் 20 சதவீதத்திற்கு வகை கூறிய பெற்றோலிய இறக்குமதிகள் 2005இன் ஐ.அ.டொலர் 1,655 மில்லியனிலிருந்து 2006இல் ஐ.அ.டொலர் 2,070 மில்லியனிற்கு 25.0 சதவீதத்தினால் அதிகரித்தன. அதேவேளையில் எண்ணெய் அல்லாத இடைநிலைப் பொருட்கள் 6.3 சதவீதத்தினால் அதிகரித்து, கைத்தொழில்துறை விரிவடைந்தமையினைப் பிரதிபலித்தது. புடவைகள், இரசாயன உற்பத்திகள், வைரம், ஆபரணம், தாள் மற்றும் இறப்பரை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் வளர்ச்சியும் 2006இல் இடைநிலைப் பொருட்களின் உயர்ந்த இறக்குமதிகளுக்குப் பங்களித்தன.

**2006இல் எண்ணெய் அல்லா இறக்குமதிகளில் முதலீட்டுப் பொருட்கள் விரைவான வளர்ச்சியை எடுத்துக் காட்டின.** அண்மைய ஆண்டுகளில் தொடர்ச்சியான விரிவாக்கத்தினைப் பதிவு செய்து வரும் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகள் 2006இல் 20.1 சதவீதத்தினால் அதிகரித்து 2005இல் பதிவு செய்யப்பட்ட 12.0 சதவீதம் கொண்ட வளர்ச்சியை விஞ்சிய செயலாற்றத்தினைக் கொண்டிருந்தது. முதலீட்டுப் பொருட்களின் பரந்த அடிப்படையிலான வளர்ச்சியில் முக்கிய அனைத்து துறைகளில், அதாவது, பொறிகள் மற்றும் கருவிகள், கட்டடப் பொருட்கள் மற்றும் போக்குவரத்துக் கருவிகள் குறிப்பாக கட்டுமானம், தொலைத்தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் அரசினாலும் தனியார் துறையினாலும் பொறுப்பேற்கப்பட்ட முதலீட்டுத் திட்டங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட விரைவுபடுத்தப்பட்ட அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் பக்கபலமாக அமைந்தன. முன்னேற்றங் கண்ட தொழில்நுட்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் 2006இல் கைத்தொழில்கள் உற்பத்தி வசதிகளை நவீனப்படுத்துவதற்கு அவற்றை ஊக்குவித்தன.

**உயர்ந்த இறக்குமதி விலைகள் மற்றும் அதிகரித்த கேள்வி இரண்டினதும் காரணமாக 2006இல் நுகர்வுப் பொருட்களின் இறக்குமதிகள் 20.5 சதவீதத்தினால் அதிகரித்தன.** உணவு மற்றும் குடிபானங்கள் மீதான செலவினம் அதிகரித்து சீனி, பால் உற்பத்தி மற்றும் கோதுமை மாவின் உயர்ந்த பன்னாட்டு விலைகளைப் பிரதிபலித்தது. இத்துணைத்துறைக்குள் கோதுமை மாவும் சீனியும் முக்கிய பங்களிப்பாளர்களாக விளங்கி பெரும்பாலும் 50 சதவீதத்திற்குப் பங்களித்தன. நீண்ட கால நுகர்வுப் பொருட்களின் துணைத்துறையில் 2005இல் வீழ்ச்சியைக் காட்டிய தனிப்பட்ட பயன்பாட்டிற்கான உந்தூர்திகளின் இறக்குமதிகள் 2006இல் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.

அட்டவணை 5.5 இறக்குமதிகளின் உள்ளமைப்பு

| வகை | 2005 பெறுமதி ஐ.அ.டொ மில் | 2005 பங்கு % | 2006 (அ) பெறுமதி ஐ.அ.டொ மில் | 2006 (அ) பங்கு % | பெறுமதியில் மாற்றம் ஐ.அ.டொ மில் | வளர்ச்சி வீதம் (அ) | வளர்ச்சிக்கான பங்களிப்பு (அ) % |
|---|---|---|---|---|---|---|---|
| **நுகர்வுப்பொருட்கள்** | **1643.9** | **18.5** | **1,980.2** | **19.3** | **336.3** | **20.5** | **24.2** |
| உணவும் குடிபானங்கள் | 752.6 | 8.5 | 956.0 | 9.3 | 203.4 | 27.0 | 14.6 |
| அரிசி | 15.6 | 0.2 | 5.5 | 0.1 | -10.1 | -64.7 | -0.7 |
| சீனி | 132.3 | 1.5 | 223.7 | 2.2 | 91.4 | 69.1 | 6.6 |
| கோதுமை | 141.4 | 1.6 | 198.6 | 1.9 | 57.2 | 40.5 | 4.1 |
| ஏனையவை | 463.3 | 5.2 | 528.2 | 5.2 | 64.9 | 14.0 | 4.7 |
| ஏனைய நுகர்வுப்பொருட்கள் | 891.3 | 10.1 | 1,024.2 | 10.0 | 132.9 | 14.9 | 9.6 |
| **இடைநிலைப் பொருட்கள்** | **5,317.1** | **60.0** | **5,961.7** | **58.1** | **644.6** | **12.1** | **46.4** |
| பெற்றோலியம் | 1,655.2 | 18.7 | 2,069.6 | 20.2 | 414.3 | 25.0 | 29.8 |
| வளமாக்கி | 135.0 | 1.5 | 164.1 | 1.6 | 29.1 | 21.6 | 2.1 |
| இரசாயனங்கள் | 248.6 | 2.8 | 260.8 | 2.5 | 12.2 | 4.9 | 0.9 |
| புடவைகள் | 1,531.0 | 17.3 | 1,546.2 | 15.1 | 15.2 | 1.0 | 1.1 |
| ஏனைய இடைநிலைப் பொருட்கள் | 1,747.3 | 19.7 | 1,921.0 | 18.7 | 173.7 | 9.9 | 12.5 |
| **முதலீட்டுப் பொருட்கள்** | **1,869.6** | **21.1** | **2,245.7** | **21.9** | **376.1** | **20.1** | **27.1** |
| பொறியும் கருவியும் | 860.4 | 9.7 | 1,075.4 | 10.5 | 215.0 | 25.0 | 15.5 |
| போக்குவரத்துக் கருவி | 325.3 | 3.7 | 373.6 | 3.6 | 48.3 | 14.8 | 3.5 |
| கட்டடப் பொருட்கள் | 507.0 | 5.7 | 546.2 | 5.3 | 39.2 | 7.7 | 2.8 |
| ஏனைய முதலீட்டுப் பொருட்கள் | 176.9 | 2.0 | 250.5 | 2.4 | 73.6 | 41.6 | 5.3 |
| **பகுக்கப்படாத இறக்குமதிகள்** | **32.6** | **0.4** | **65.4** | **0.6** | **32.8** | **100.7** | **2.3** |
| **மொத்த இறக்குமதிகள் (ஆ)** | **8,863.2** | **100.0** | **10,253.0** | **100.0** | **1,389.8** | **15.7** | **100.0** |
| ஆண்டுச்சராசரி செலாவணி வீதம் | 100.50 | | 103.96 | | | | |

(அ) தற்காலிகமானவை
(ஆ) சீராக்கப்பட்டது

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
இலங்கை மத்திய வங்கி
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

**ஏற்றுமதிகளை விட இறக்குமதிகள் விரைவான வேகத்தில் அதிகரித்தமையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 2006இல் வர்த்தகப் பற்றாக்குறை மேலும் விரிவடைந்தது.** வர்த்தகப் பற்றாக்குறையானது 2005இன் ஐ.அ.டொலர் 2,516 மில்லியனுடன் (மொ.உ.உற்பத்தியின் 10.7 சதவீதம்) ஒப்பிடுகையில் 2006இல் ஐ.அ.டொலர் 3,370 மில்லியனுக்கு (மொ.உ.உற்பத்தியின் 12.5 சதவீதம்) விரிவடைந்தது.

**ஏற்றுமதி விலைகளிலும் பார்க்க இறக்குமதிகளின் விலைகள் உயர்ந்தளவில் வளர்ச்சியடைந்தமையின் காரணமாக 2006இல் வர்த்தகமாற்று விகிதம் மோசமடைந்தது.** உலக எண்ணெய் விலைகளில் ஏற்பட்ட திடீர் உயர்வின் விளைவாக இறப்பர் மற்றும் நீர்க்கல, பெற்றோலிய எரிபொருட்களை உள்ளடக்கிய பெற்றோலிய உற்பத்திகளின் ஏற்றுமதிகள் அதிகரித்தமையானது 2006இல் விலைகளில் குறிப்பிடத்தக்க உயர்வினை ஏற்படுத்தியது. இலங்கைத் தேயிலையின் தரத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றம் கென்யாவின் தேயிலை உற்பத்தியில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி என்பனவற்றின் விளைவாக தேயிலை விலைகள் உலகின் சராசரி விலைகளை விடக் கூடுதலாக அதிகரித்தன. இவ்வுற்பத்திகளின் விலை அதிகரிப்புக்கள் 2005இல் பல்நூலிழை உடன்படிக்கை முடிவடைந்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட கடுமையான போட்டியின் காரணமாக புடவைகள் மற்றும் ஆடைகளின் விலைகளில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்ட போதும் தேயிலை, இறப்பர் மற்றும் பெற்றோலிய உற்பத்திகளின் சராசரி விலைகளில் ஏற்பட்ட உயர்வு 2006இல் பொதுவான ஏற்றுமதி விலைகள் 4.2 சதவீதத்தினால் அதிகரிக்க உதவியது. 2006இல் ஏற்றுமதி அளவு 4.1 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டில் நிலவிய உயர்ந்த எண்ணெய் விலைகள், வளமாக்கி, இரசாயனக் கலவைகள் மற்றும் சீனி என்பனவற்றின் விலைகளையும் அதிகரித்தன. சீனிக்காகப் பயிரிடப்பட்ட கூடியளவு பயிர்கள் கசோலின் எண்ணெய்க்கு பதிலீடாக உயிரியல் எரிபொருளான ஈதானோலினை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்பட்டமையினால் பன்னாட்டு சீனி விலைகள் உச்சத்திற்கு அதிகரித்தன. இவ்வாண்டில் உலகம் முழுவதிலும் காணப்பட்ட குறைவான பயிர்ச் செய்கை வலுவடைந்த கேள்வியுடன் இணைந்து உலகளாவிய கோதுமை மற்றும் இருப்பினை சுருக்கிவிட்டமையினால் தசாப்த காலத்திலேயே விலைகள் உயர்ந்த மட்டத்தினை அடையக் காரணமாயிற்று. இவ்வபிவிருத்திகளின் விளைவாக, இறக்குமதிகளின் விலைகள் 8.0 சதவீதத்தினாலும் இறக்குமதி அளவு 7.1 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இதனால் 2006இல் வர்த்தக மாற்று விகிதம் 3.5 சதவீதத்தினால் மோசமடைந்தது. எனினும், இம்மோசமான தன்மை 2005இல் பதிவு செய்யப்பட்ட மட்டமான 4.2 சதவீதத்தினை விடக் குறைவாக இருந்தது.

## வர்த்தகத்தின் போக்கு

**மேற்கத்தைய நாடுகள் முக்கிய ஏற்றுமதிகளின் சேரிடங்களாக தொடர்ந்தும் விளங்கிய வேளையில் ஆசிய நாடுகள் முக்கிய இறக்குமதி நிரம்பலர்களாக விளங்கின.** இலங்கையின் பாரிய ஏற்றுமதி நாடாக ஐக்கிய அமெரிக்கா விளங்கிய போதும் அதன் பங்கு 2005இன் 31 சதவீதத்திலிருந்து 2006இல் 29 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. ஐக்கிய அமெரிக்காவிற்கான ஏற்றுமதிகள் 0.9 சதவீதத்தினால் மட்டும் அதிகரித்து,

பிராந்திய ரீதியான தீவிரமான போட்டியின் காரணமாக ஆடை ஏற்றுமதிகள் மெதுவாக வளர்ச்சியடைந்தமையினைப் பிரதிபலித்தது. ஐக்கிய இராச்சியம் 12.8 சதவீதமான ஏற்றுமதிப் பங்குடன் இலங்கை ஏற்றுமதிகளின் இரண்டாவது பெரிய சேரிடமாக விளங்கியது. முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமைகள் திட்டத்தின் கீழ் இலங்கையினால் பெறப்பட்ட தீர்வைச் சலுகைகள் பயன்படுத்தப்பட்டமையின் காரணமாக ஐ.இராச்சியத்திற்கான ஏற்றுமதிகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. இந்தியா மூன்றாவது பெரிய ஏற்றுமதிச் சேரிடம் என்ற நிலையினை தக்க வைத்துக் கொண்டது. எனினும், இந்திய சந்தைகளுக்கான ஏற்றுமதிகளின் பங்கு 2005இன் 9 சதவீதத்திலிருந்து 7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தமைக்கு வனஸ்பதியின் குறைந்த ஏற்றுமதிகளே முக்கிய காரணமாகும். இலங்கை ஏற்றுமதிகளின் முக்கிய சேரிடங்களாக பெல்ஜியம், சேர்மனி, இத்தாலி, ரூஸ்யா, ஐ.அரபு எமிறேட்ஸ், பிரான்சு மற்றும் யப்பான் என்பன காணப்பட்டன.

**2006இல் இந்தியாவிலிருந்தான உயர்ந்தளவு பங்களிப்புடன் ஆசிய நாடுகள் பிராந்தியமென்ற ரீதியில் இறக்குமதிகளின் முக்கிய நாடுகளாக தொடர்ந்தும் விளங்கின.** 2006இல் ஆசிய நாடுகளின் சந்தைப் பங்கு 60 சதவீதத்தில் மாற்றமின்றிக் காணப்பட்டது. 21 சதவீத பங்குகளுடன் இந்தியா இறக்குமதிகளின் மிகப் பெரிய மூலமாகவும் அதனைத் தொடர்ந்து சிங்கப்பூர் (10 சதவீதம்), சீனா (8 சதவீதம்), ஈரான் (7 சதவீதம்) மற்றும் கொங்கொங் (6 சதவீதம்) என்பனவும் விளங்கின.

**அட்டவணை 5.6** முக்கிய இறக்குமதிகளின் அளவு (அ)


000 மெற்றிக்தொன்

| விடயம் | 2002 | 2003 | 2004 | 2005(ஆ) | 2006(இ) |
|---|---|---|---|---|---|
| **அரிசி** | **95** | **35** | **222** | **52** | **12** |
| 1ஆம் காலாண்டு | 51 | 22 | 9 | 43 | 3 |
| 2ஆம் காலாண்டு | 9 | 9 | 9 | 4 | 2 |
| 3ஆம் காலாண்டு | 10 | 2 | 4 | 2 | 3 |
| 4ஆம் காலாண்டு | 25 | 2 | 200 | 3 | 4 |
| **கோதுமை** | **993** | **919** | **993** | **864** | **1,200** |
| 1ஆம் காலாண்டு | 309 | 262 | 257 | 272 | 287 |
| 2ஆம் காலாண்டு | 215 | 232 | 218 | 191 | 321 |
| 3ஆம் காலாண்டு | 221 | 217 | 189 | 174 | 331 |
| 4ஆம் காலாண்டு | 248 | 208 | 329 | 227 | 261 |
| **சீனி** | **554** | **509** | **438** | **418** | **525** |
| 1ஆம் காலாண்டு | 146 | 151 | 98 | 49 | 112 |
| 2ஆம் காலாண்டு | 141 | 135 | 173 | 167 | 137 |
| 3ஆம் காலாண்டு | 110 | 104 | 71 | 94 | 127 |
| 4ஆம் காலாண்டு | 157 | 119 | 96 | 108 | 149 |
| **பெற்றோலியம் (மசகெண்ணெய்)** | **2,300** | **1,995** | **2,200** | **2,008** | **2,151** |
| 1ஆம் காலாண்டு | 539 | 382 | 586 | 586 | 592 |
| 2ஆம் காலாண்டு | 513 | 466 | 464 | 581 | 535 |
| 3ஆம் காலாண்டு | 593 | 500 | 634 | 246 | 582 |
| 4ஆம் காலாண்டு | 655 | 647 | 516 | 595 | 442 |
| **தூய்மையாக்கப்பட்ட பெற்றோலியம்** | **1,348** | **1,168** | **1,645** | **1,823** | **1,763** |
| 1ஆம் காலாண்டு | 276 | 340 | 460 | 314 | 402 |
| 2ஆம் காலாண்டு | 426 | 239 | 380 | 396 | 468 |
| 3ஆம் காலாண்டு | 266 | 317 | 341 | 711 | 334 |
| 4ஆம் காலாண்டு | 380 | 272 | 464 | 402 | 559 |
| **வளமாக்கி** | **537** | **514** | **510** | **529** | **633** |
| 1ஆம் காலாண்டு | 103 | 124 | 54 | 168 | 165 |
| 2ஆம் காலாண்டு | 163 | 166 | 164 | 111 | 203 |
| 3ஆம் காலாண்டு | 138 | 49 | 76 | 142 | 119 |
| 4ஆம் காலாண்டு | 133 | 175 | 216 | 107 | 146 |

(அ) சீராக்கப்பட்டது
(ஆ) திருத்தியமைக்கப்பட்டது
(இ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுங்கம்
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
வரையறுக்கப்பட்ட பிறிமா இலங்கை

**வரைபடம் 5.4** முக்கிய வகையின்படி இறக்குமதிகளின் பங்கு





## 5.4 பணிகளிலான வர்த்தகம், வருமானம், மாற்றல்கள் மற்றும் நடைமுறைக் கணக்கு நிலுவை

### போக்குவரத்துப் பணிகளிலான வர்த்தகம்

**கப்பற்சரக்குக் கட்டணங்கள், துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் பயணிகள் பயணக் கட்டணங்கள் என்பனவற்றை உள்ளடக்கிய போக்குவரத்துப் பணிகளிலிருந்தான தேறிய வருவாய்கள் 2006இல் ஐ.அ.டொலர் 211 மில்லியனிற்கு 3.6 சதவீதத்தினால் அதிகரித்தன.** போக்குவரத்துப் பணிகளிலிருந்தான உட்பாய்ச்சல் 11.5சதவீதத்தினால் அதிகரித்ததுடன் இதற்கு கையாளப்பட்ட மாற்றிக் கப்பலேற்றும் சரக்குகளின் உயர்ந்தளவின் காரணமாக துறைமுகத்துடன் தொடர்பான நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் தேசிய வானூர்தி நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படும் மற்றைய நாடுகளுக்கான பறப்புகள் விரிவடைந்தமை, பறப்புக்களின் எண்ணிக்கை அதிகரித்தமை என்பனவற்றின் காரணமாக பயணிகள் கட்டணங்களிலிருந்தான அதிகரித்த வருவாய்களும் முனைப்புப் பெற்றிருந்தன. மாற்றிக் கப்பலேற்றல் சரக்கு கையாளல் 37 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தமையானது இந்தியாவின் உயர்ந்த பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்து அந்நாட்டின் பன்னாட்டு வர்த்தகம் விரிவடைந்தமையினைப் பிரதிபலித்தது. அரசாங்கத்தின் பத்தாண்டு அபிவிருத்திக் கட்டமைப்பு 2006-2016இல் அடையாளம் கண்டவாறு பல்வேறு அபிவிருத்திச் செயற்றிட்டங்கள் குறிப்பாக கொழும்பு தெற்கு துறைமுகத்தின் நிருமாணம் எதிர்கால வருவாய் வாய்ப்புக்களையும் கொழும்பு துறைமுகத்தின் போட்டித்தன்மையினையும் அதிகரிக்கும். அதேவேளை போக்குவரத்தின் பேரிலான வெளிப்பாய்ச்சல்களும் இறக்குமதிகளில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சி மற்றும் பொழுதுபோக்கு, தொழில் வாய்ப்பு, கல்வி மற்றும் நலக்கவனிப்பு நோக்கங்களுக்காக வெளிநாட்டிற்கு செல்லும் இலங்கையர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றிற்கு இணையாக 14.9 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் அதிகரித்தது.

**வரைபடம் 5.5 வர்த்தகத்தின் போக்கு**




## பயணம் மற்றும் சுற்றுலா

**சுற்றுலா வருகைகள் 2005இன் 549,308 வருகைகளுக்கும் மேலாக 2006இல் 559,603 வருகைகளுக்கு 1.9 சதவீதத்தினால் அதிகரித்தன.** சுனாமி அனர்த்தத்தின் காரணமாக 2005இல் காணப்பட்ட பின்னடைவு நிலைமைகளுக்கு மாறாக 2006இன் சுற்றுலா வருகைகள் படிப்படியாக மீட்சியடைந்து 17 சதவீதமான வளர்ச்சியைப் பதிவு செய்தன. எனினும், ஆண்டின் பிற்பகுதியில் இவற்றிற்கான பயணங்களை ஊக்கமிழக்கச் செய்த இத்தாலி, சேர்மனி, பிரான்சு மற்றும் அவுத்திரேலியா உட்பட சில மேற்கத்தைய நாடுகளினால் விடுக்கப்பட்ட பயண மதியுரைகளின் பின்னணியில் நிலைமையானது படிப்படியாக மாற்றமடைந்தது. இவ்வபிவிருத்திகள் காணப்பட்ட போதும் 2006இல் சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய்கள் ஐ.அ.டொலர் 410.3 மில்லியனிற்கு 24.7 சதவீதம் கொண்ட உயர்ந்த வீதத்தில் அதிகரித்தமைக்கு 2005 உடன் ஒப்பிடுகையில் உயர்ந்த அறைக் கட்டணங்களும் அறைகளில் தங்கியிருக்கும் வீதங்களும் 2006இல் உயர்ந்தளவில் அதிகரித்தமையே காரணமாகும். மேற்கு ஐரோப்பா 40.8 சதவீதம் கொண்ட சந்தைப் பங்கிற்கு வகை கூறி தொடர்ந்தும் பாரிய சுற்றுலா உருவாக்கப் பிரதேசமாக விளங்கிய வேளையில் தென்னாசியா 30.2 சதவீதப் பங்குடன் இரண்டாவது இடத்தில் காணப்பட்டது. எனினும், தனியொரு நாடு என்ற ரீதியில் இந்தியா தொடாந்து இரண்டாவதாண்டாக இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளை உருவாக்கும் மிகப் பாரிய சந்தையாக தொடர்ந்தும் விளங்கி வருகிறது.

## தொலைத் தொடர்பூட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்ப பணிகளிலான வர்த்தகம்

**2006இல் தொலைத் தொடர்பூட்டல் பணிகளிலிருந்தான வருவாய்கள் ஐ.அ.டொலர் 68 மில்லியனிற்கு ஏறத்தாள 55 சதவீதத்தினால் அதிகரித்தன.** எனினும், 2003இல் பன்னாட்டு தொலைத்தொடர்பு நுழைவு வழி தாராளமயமாக்கப்பட்டதன் பின்னர் தொலைத்தொடர்புக் கம்பனிகளிடையேயான அதிகரித்த போட்டி பன்னாட்டு அழைப்புக் கட்டணங்களைக் குறைத்துள்ளமையானது இலங்கையிலிருந்து பன்னாட்டு அழைப்புக்களைப் பெறுவதற்கு இலங்கையர்களை ஊக்குவிக்கிறது. இதன் விளைவாக, தொலைத் தொடர்பூட்டல் பணிகளின் பேரிலான வெளிப்பாய்ச்சல்கள் 2003ஆம் ஆண்டின் பின்னர் தொடர்ந்தும் அதிகரித்தது. இதன் காரணமாக 2006இல் தொலைத் தொடர்பூட்டல்களிலிருந்தான தேறிய வருவாய்கள் ஐ.அ.டொலர் 19 மில்லியனுக்கு 24.5 சதவீதத்தினால் வீழ்ச்சி கண்டன.

**தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான வெளிமூலங்களுக்கு வழங்குவதற்கான வியாபார செய்முறைகள் போன்ற மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளின் ஏற்றுமதிகள் 2006இல் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் தொடர்பான தகவல் தொழில்நுட்பம் மேலும் முன்னேற்றமடைய உதவியளித்தது.** 2006இல் மென்பொருள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இயலுமைப் பணிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான தேறிய வருவாய்கள் ஐ.அ.டொலர் 98 மில்லியனிற்கு ஏறத்தாள 19 சதவீதத்தினால் அதிகரித்தன. இலங்கை அதன் உயர்ந்த கல்வி அறிவு வீதத்தின் காரணமாக அத்தகைய பணிகளின் ஏற்றுமதிகளை ஊக்குவிப்பதில் ஒப்பீட்டு ரீதியில் உயர்ந்த அநுகூலங்களைக் கொண்டிருக்கின்றது. இலங்கை உயர்ந்த தகைமை கொண்ட கணக்காளர்கள், பொறியியலாளர்கள், தகவல் தொழில்நுட்ப நிபுணர்கள் மற்றும் ஏனைய தொழில்சார் நிபுணர்களை உருவாக்கக்கூடிய இயலாற்றலைக் கொண்டிருப்பதுடன் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினையும் கொண்டிருக்கிறது. மேலும், பதிப்புரிமை மற்றும் புலமைச் சொத்துரிமை என்பனவற்றைப் பாதுகாக்கின்ற தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் ஈ-வர்த்தகம் என்பனவற்றிற்கான ஆற்றல்மிக்க சட்ட கட்டமைப்பினையும் கொண்டிருக்கிறது. இத்தகைய

**அட்டவணை 5.7 தேறிய பணிகள், வருமானம் மற்றும் மாற்றல்கள் (அ)**


| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | ரூபா மில்லியன் | |
|---|---|---|---|---|
| | 2005 | 2006 | 2005(அ) | 2006 (ஆ) |
| 1. போக்குவரத்து | 204 | 211 | 20,452 | 21,885 |
| 2. பயணம் | 115 | 37 | 11,553 | 3,836 |
| 3. தொடர்பூட்டல், சேவைகள் | 25 | 19 | 2,503 | 1,959 |
| 4. கணனி மற்றும் தகவல் தொழில் நுட்பப் பணிகள் | 82 | 98 | 8,371 | 10,188 |
| 5. கட்டடவாக்கப் பணிகள் | 24 | 24 | 2,396 | 2,456 |
| 6. காப்புறுதிப் பணிகள் | 39 | 20 | 3,890 | 2,081 |
| 7. ஏனைய வியாபாரப் பணிகள் | -134 | -138 | -13,513 | -14,297 |
| 8. அரச செலவினம் வே.எ.கு | -16 | -14 | -1,607 | -1,448 |
| மொத்தப் பணிகள் | **338** | **257** | **34,043** | **26,660** |
| 1. ஊழியர்களின் இழப்பீடு | -9 | -11 | -940 | -1,138 |
| 2. நேரடி முதலீடு | -112 | -360 | -11,245 | -37,413 |
| 3. வட்டியும் ஏனைய கட்டணங்களும் | -178 | -18 | -17,864 | -1,802 |
| மொத்த வருமானம் | **-299** | **-388** | **-30,049** | **-40,353** |
| 1. தனியார் | 1,736 | 2,068 | 174,542 | 215,102 |
| 2. பொது அரசு | 93 | 101 | 9,300 | 10,524 |
| மொத்த நடைமுறை மாற்றல்கள் | **1,828** | **2,169** | **183,842** | **225,626** |

(அ) இவ்விளக்கம் ப.நா. நிதியத்தின் சென்மதி நிலுவை கையேட்டின் 5ஆம் பதிப்புடன் (1993) சாத்தியமான அளவுக்கு இணங்கிச் செல்லுகின்றது.

(ஆ) தற்காலிகமானவை

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரைபடம் 5.6 மாதாந்த சுற்றுலா வருகைகள்




சாதகமான காரணிகளை இலங்கையில் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்பான முதலீடுகளை ஊக்குவிக்க சாதகமான முறையில் பயன்படுத்த முடியும்.

### வருமானத்தின் உட்பாய்ச்சலும் வெளிப்பாய்ச்சலும்

**நாட்டின் அலுவல்சார் வெளிநாட்டு ஒதுக்குகளின் முதலீட்டிலிருந்தான வருமானத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு 2006இல் வருமானக் கணக்கின் விரிவடைந்த பற்றாக்குறையினை கட்டுப்படுத்த உதவியது.** 2006இல் அலுவல்சார் ஒதுக்கங்களின் முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானம் ஐ.அ.டொலர் 73 மில்லியனிற்கு 6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு உலகளாவிய வட்டி வீதங்கள் உயர்வடைந்தமையும் அலுவல்சார் ஒதுக்குகள் மேலும் திரட்சியுற்றமையுமே முக்கிய காரணங்களாகும். மேலும், 2006இல் மற்றைய முக்கிய காரணங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் 2005இன் உயர்விற்கு எதிராக தேய்வடைந்தமையும் ஐ.அ.டொலர் நியதிகளில், சந்தைப் பெறுமதிகளின் அடிப்படையின் மீது மதிப்பிடப்பட்ட வெளிநாட்டு ஒதுக்குகளின் பெறுமதியில் குறிப்பிடத்தக்க நன்மைகளை விளைவித்தது. அதேவேளை, இவ்வாண்டில் வெளிநாட்டுப்படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் கணிசமாக அதிகரித்தமைக்கு கடந்த காலத்தில் காணப்பட்ட உயர்ந்த திரண்ட படுகடனும் 2005இல் படுகடன்களின் சட்ட இசைவுத் தாமதம் முடிவடைந்தமையுமே முக்கிய காரணமாகும். ஏற்கனவேயுள்ள தொழிற்பாடுகளின் விரிவாக்கத்திற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடுகளை உள்ளடக்கிய அம்முதலீட்டாளர்களின் இலாபங்கள் மற்றும் பங்கிலாபங்களை வெளியில் அனுப்புவதும் கணிசமாக அதிகரித்தது.

### நடைமுறை மாற்றல்கள்

**2006இல் நடைமுறை மாற்றல்கள் கணக்கிற்கான உட்பாய்ச்சல்கள் 18.6 சதவீதத்தினால் அதிகரித்தமைக்கு 2004இல் நிகழ்ந்த சுனாமி அனர்த்தத்தினைத் தொடர்ந்து, தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் உயர்ந்த வீதத்தில் வளர்ச்சியடைந்த அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்களே முக்கிய காரணமாகும். வெளிநாட்டு தொழில்வாய்ப்பிற்காக புலம் பெயர்வோரின் எண்ணிக்கை 2006இல் 201,143இற்கு 14.4 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த போதும் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஐ.அ.டொலர் 2,326 மில்லியனிற்கு 21.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.** இவ்வதிகரிப்பிற்கு எண்ணெயை உற்பத்தி செய்யும் மத்திய கிழக்கு பிராந்தியத்திலுள்ள புலம் பெயர்ந்தோரின் சராசரிக் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, கொரியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் போன்ற உயர்ந்த கூலிகளைக் கொண்ட நாடுகளுக்கு அதிகளவில் புலம் பெயர்ந்தமை மற்றும் புலம் பெயர்ந்த இலங்கையரிடையே இலங்கை வங்கிகளினால் இலத்திரனியல் நிதியமாற்றல் முறை பிரபல்யப்படுத்தப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக அமைந்தன. அரச வங்கிகள், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் மற்றும் உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் என்போரின் தீவிரமான ஒத்துழைப்புடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டன. புதிய முயற்சிகள் எதிர்காலத்தில் தொழிலாளர்களின் பணவனுப்பல்களை மேலும் அதிகரிக்கும் போல் தோன்றுகிறது. அதிகரித்த தொழிலாளர் பணவனுப்பல்கள் 2006இன் வர்த்தகப் பற்றாக்குறையில் ஏறத்தாள 69 சதவீதத்திற்கு நிதியிட்டன.

### நடைமுறைக் கணக்கு நிலுவை

**2006இல் நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை 2005 இன் ஐ.அ.டொலர் 651 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 1,334 மில்லியனிற்கு கணிசமாக விரிவடைந்தது. மொ.உ.உ. நியதிகளில் இது 2005இன் மொ.உ.உ.இன் 2.8 சதவீதத்திலிருந்து 2006இல் மொ.உ.உ.இன் 4.9 சதவீதத்திற்கு அதிகரித்தது.** விரிவடைந்து செல்லும் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையானது நாட்டின் விரிவடைந்து செல்லும் சேமிப்பு - முதலீட்டு இடைவெளியினைப் பிரதிபலிப்பதுடன் 7 - 8 சதவீதமான பொருளாதார வளர்ச்சி வீதத்தினை எய்துவதற்குத் தேவையான அவசியமான முதலீட்டுச் செலவினத்தினை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு மூலதனத்தினைக் கவர வேண்டிய தேவையினையும் தெளிவாகக் காட்டுகிறது.

## 5.5 மூலதன மற்றும் நிதியியல் பாய்ச்சல்களும் சென்மதி நிலுவையும்

### வெளிநாட்டு நேரடி முதலீடு

**மொத்த நேரடி வெளிநாட்டு முதலீடு 1997இல் இடம் பெற்ற முன்னைய உச்ச மட்டத்தினை விஞ்சி 2006இல் முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டத்தினை அடைந்தது.** 2006இல் மொத்த வெளிநாட்டு நேரடி

அட்டவணை 5.8 சுற்றுலாவின் செயலாற்றம்

| விடயம் | 2002 | 2003 | 2004 (அ) | 2005 (அ) | 2006 (ஆ) | வளர்ச்சி வீதம் 2005 (அ) | வளர்ச்சி வீதம் 2006 (ஆ) |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சுற்றுலா வருகைகள் | 393,171 | 500,642 | 566,202 | 549,308 | 559,603 | 13.1 | 1.9 |
| 2. சுற்றுலா இரவுகள் (000) | 3,989 | 5,093 | 5,742 | 4,754 | 5,793 | 12.7 | 21.9 |
| 3. தங்கும் அறை விகிதம் (%) | 43.1 | 53.2 | 59.3 | 45.4 | 47.8 | 11.5 | 5.3 |
| 4. மொத்தச் சுற்றுலா பெறுகைகள் (ரூ.மில்) | 24,202 | 32,810 | 42,059 | 36,377 | 42,586 | 28.2 | 17.1 |
| 5. தலைக்குரிய சுற்றுலா பெறுகைகள் (ரூபா) | 61,556 | 65,536 | 74,283 | 66,223 | 76,100 | 13.3 | 14.9 |
| 6. மொத்தத் தொழில் நிலை | 93,170 | 112,226 | 129,038 | 125,004 | 133,558 | 15.0 | 6.8 |
| நேரடி | 38,821 | 46,761 | 53,766 | 52,085 | 55,649 | 15.0 | 6.8 |
| | 54,349 | 65,465 | 75,272 | 72,919 | 77,909 | 15.0 | 6.8 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை

மூலங்கள்: இலங்கைச் சுற்றுலாச்சபை
இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 5.9** 2006 காலப்பகுதியில் வெளிநாட்டு கடனிடல் மூலமான பிரதான செயற்றிட்டங்கள்

| கொடை வழங்குனர் | செயற்றிட்டம் | வழங்கப்பட்ட தொகை ஐ.அ.டொலர் மில்லியனில் |
|---|---|---|
| **ஆசிய அபிவிருத்தி வங்கி** | | **174.9** |
| இதில்: தென் மாகாண போக்குவரத்து அபிவிருத்திச் செயற்றிட்டம் | | 23.4 |
| கிராமிய நிதித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | | 19.7 |
| வீதித்துறை அபிவிருத்திச் செயற்றிட்டம் | | 19.0 |
| இறை முகாமைத்துவ நிறுவனங்களின் செயற்றிட்டத்தினை வலுப்படுத்தல் | | 15.5 |
| வீதி வலையமைப்பு மேம்பாட்டுச் செயற்றிட்டம் | | 13.7 |
| **பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு** | | 100.2 |
| இதில்: சுனாமி அவசரகால மீட்புச் செயற்றிட்டம் கட்டம் 11 | | 24.6 |
| கிராமியப் பொருளாதாரத்திற்கான புதுப்பிக்கத்தக்க வலு அபிவிருத்திச் செயற்றிட்டம் | | 19.3 |
| வட கிழக்கு வீடமைப்பு புனரமைப்புச் செயற்றிட்டம் | | 16.3 |
| வீதித்துறை உதவியளித்தல் செயற்றிட்டம் | | **13.6** |
| **யப்பானிய அரசாங்கம்** | | **262.5** |
| இதில்: பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலைய அபிவிருத்திச் செயற்றிட்டம் | | 44.7 |
| இலங்கை சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீட்சி மற்றும் முன்னேற்றப்படுத்தல் செயற்றிட்டம் | | 27.3 |
| தென்பகுதி நெடுஞ்சாலைகள் நிருமாணச் செயற்றிட்டம் | | 25.8 |
| சிறிய மற்றும் நுண்பாக கைத்தொழில்கள் தலைமை மற்றும் தொழில் ஊக்குவிப்பு | | 24.7 |
| சிறிய அளவு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் | | 22.9 |
| கொழும்பு பெரும்பாகத்திற்கான களுகங்கை நீர் விநியோக செயற்றிட்டம் | | 16.9 |
| கண்டி பெரும்பாகத்திற்கான நீர் விநியோகச் செயற்றிட்டம் | | 15.9 |
| சிறிய அளவு உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் தரமுயர்த்தல் செயற்றிட்டம் | | 15.7 |
| **யேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு அரசாங்கம்** | | **55.2** |
| இதில் தனியார்துறை அபிவிருத்தி (டிஎவ்சிசி IV) | | 17.9 |
| சப்புகஸ்கந்தை டீசல் வலுச் செயற்றிட்டம் - முதலாவது விரிவுபடுத்தல் | | 16.4 |
| தனியார்துறை ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம் - என்டிபி V | | 10.1 |
| **வரையறுக்கப்பட்ட சிட்டி குறூப் முதலீட்டு வங்கி** | | **100.0** |
| கூட்டுக்கடன் | | 100.0 |
| **வரையறுக்கப்பட்ட கொங்கொங் சன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன்** | | **50.0** |
| கூட்டுக்கடன் | | 50.0 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி வெளிநாட்டு மூலவளத் திணைக்களம்

உட்பாய்ச்சல்கள் 1997இல் பதிவு செய்யப்பட்ட உச்சமட்டமான ஐ.அ.டொலர் 450 மில்லயனை விஞ்சி முன்னெப்பொழுதுமில்லாத உயர்ந்த மட்டமான ஐ.அ.டொலர் 604 மில்லியனை அடைந்தன. இது தனியார் மயமாக்கல் பெறுகையான ஏறத்தாள 301 மில்லியனையும் உள்ளடக்கியிருந்தது. அதிகரித்த முதலீட்டுப் பாய்ச்சலுக்கு, ஏற்கனவேயுள்ள முதலீட்டுச்சபைக் கம்பனிகளினால் குறிப்பாக பணிகள் துறையிலுள்ள அத்தகைய கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்ட வருவாய்களின் மீள்முதலீடுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு மற்றும் நிபயும் நிலயங்களின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அபிவிருத்திக் குன்றிய பிரதேசங்களில் 300 தொழிற்சாலைகளை ஏற்படுத்துவது உட்பட உயர் முதலீடுகளை கவர்வதற்கு முதலீட்டுச் சபையினால் எடுக்கப்பட்ட புதிய முயற்சிகள் என்பன காரணங்களாக இருக்க முடியும். வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் பாய்ச்சலானது ஐ.அ.டொலர் 81 மில்லியனைக் கொண்ட பங்கு மூலதனம், ஐ.அ.டொலர் 75 மில்லியனைக் கொண்ட பங்குடமையாளர்களின் கடன்கள் மற்றும் முற்பணங்கள், ஐ.அ.டொலர் 124 மில்லியனைக் கொண்ட வெளிநாட்டுக் கடன்கள் மற்றும் ஏற்கனவேயுள்ள கம்பனிகளினால் வைத்திருக்கப்பட்டு மீள்முதலீடு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 324 மில்லியன் என்பனவற்றை உள்ளடக்கியருந்தன. வீதிகள், நெடுஞ்சாலைகள், வலுவழங்கல் போன்ற வடிவிலமைந்த அடிப்படை உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை விரைவுபடுத்துகின்ற வேளையில் சொத்துரிமைகளை உறுதிப்படுத்தல், பிணக்குகளுக்கு சிறந்த முறையில் விரைந்த தீர்வுகளைக் காணுதல் மற்றும் பெருமளவு தொழிலாளர்களைத் திரட்டுதல் போன்ற இயலுமைமிக்க வியாபாரச் சூழலைப் பேணுவதும் உயர்ந்தமட்ட வெளிநாட்டு நேரடி முதலீடுகளைப் பெற்றுக் கொள்ள உதவும். அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்ட உள்ளூர் கம்பனிகள் மட்டுமே வெளிநாட்டில் முதலீடு செய்தமையினால் வெளிநாட்டு நேரடி முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்கள் 2005இன் ஐ.அ.டொலர் 38 மில்லியனிலிருந்து 2006இல் ஐ.அ.டொலர் 30 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.

## அரசாங்கத்திற்கான வெளிநாட்டு மூலதனம்

**2006இல் அரசாங்கம் ஐ.அ.டொலர் 1.2 மில்லியன் பெறுமதி கொண்ட உச்சமட்ட கொடைகளையும் கடன்களையும் திரட்டக் கூடியதாக இருந்தது.** 2006இல் பெறப்பட்ட மொத்தக் கடனில் 75 சதவீதம் சலுகை நியதிகளிலும் 25 சதவீதம் வர்த்தக நியதிகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையிலும் பெறப்பட்டன. நடைமுறை மற்றும் மூலதன தன்மைகள் இரண்டினையும் உள்ளடக்கிய மொத்தக் கொடைகள், 2005இன் ஐ.அ.டொலர் 236 மில்லியனிலிருந்து 2006இல் ஐ.அ.டொலர் 287 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு சுனாமி மீள்கட்டுமான நடவடிக்கைகளுக்காக கூடியளவு நிதி பெறப்பட்டமையே காரணமாகும். அதேவேளை 2006இல் மொத்த நீண்டகாலக் கடன்களின் உட்பாய்ச்சல்கள் ஐ.அ.டொலர் 932 மில்லியனுக்கு அதிகரித்தன. 2006இல் அரசாங்கம் பன்னாட்டுச் சந்தைகளிலிருந்து ஐ.அ.டொலர் 150 மில்லியன் கொண்ட கூட்டுக் கடன்களைத் திரட்டிக் கொண்டது. சலுகைக் கடன்களின் உட்பாய்ச்சல்களும் ஐ.அ.டொலர் 703 மில்லியனுக்கு ஏறத்தாள 11 சதவீதத்தினால் அதிகரித்தன. 2006இல் நிகழ்ச்சித்திட்டக் கடன்களின் உட்பாய்ச்சல் ஐ.அ.டொலர் 52 மில்லியனுக்கு அதிகரித்து இறை முகாமைத்துவ சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டம், கிராமிய நிதித்துறை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் சபுகஸ்கந்த வலு பொறி நிகழ்ச்சித்திட்டம் என்பனவற்றிற்கான கடன்களையும் உள்ளடக்கியிருந்தது. எனினும், இலங்கை மின்சபையினால் முன்மொழியப்பட்ட மேம்பாடுகள் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்த முடியாமல் போனமையினால் கிடைக்கத்தக்கதாக இருந்த நிகழ்ச்சித்திட்ட நிதியிடலை அரசாங்கத்தினால் முழுமையாக பயன்படுத்த முடியாமல் போயிற்று. 2006இல் செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்பு ஏறத்தாள 6.5 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 651 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு சுனாமியினால் சேதமடைந்த உட்கட்டமைப்பின் மீள்கட்டுமானம் மற்றும் ஏனைய பல உட்கட்டமைப்பு செயற்றிட்டங்களின் நடைமுறைப்படுத்தல் என்பன காரணங்களாக அமைந்தன. வெளிநாட்டு உதவிப் பயன்பாட்டு வீதம் 2005இல் பதிவு செய்யப்பட்ட 17.0 சதவீதத்திலிருந்து 2006இல் 21.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.[1] அதேவேளை, சட்ட ரீதியான கடன் இசைவுத் தாமதம் 2005இல் முடிவடைந்தமையினைத் தொடர்ந்து 2006இல் படுகடன் மீள்கொடுப்பனவுகள் மீளத்தொடங்கியமையினாலும் பாதுகாப்புக் கடன்களின் மீள்கொடுப்பனவுகளில் அதிகரிப்பு ஏற்பட்டமையினாலும் அரசாங்கத்தின் கடன் மீள்கொடுப்பனவுகள் ஐ.அ.டொலர் 441 மில்லியனுக்கு 127.4 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தது.

**2006இல் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு வர்த்தக வெளிநாட்டு நாணயக் கடன்பாடுகள் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன.** ரூபாக்

[1] வெளிநாட்டு உதவி பயன்பாட்டு வீதமானது யூன் இறுதியிலுள்ளவாறான வாக்களிக்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படாத மீதிகளுக்கு ஆண்டுக்காலப்பகுதியில் பகிர்ந்தளிக்கப்பட்டவற்றின் விகிதமாக அளவிடப்படுகின்றது.

கடன்பாடுகளுடன் ஒப்பிடுகையில் இவ்வெளிநாட்டு நாணய வர்த்தகக்கடன்கள் ஒப்பீட்டு ரீதியில் மலிவாக இருந்த போதும் வர்த்தகப் படுகடன் இலகுவில் ஏற்படும் திடீர் உயர்வு செலாவணிவீத இடர்நேர்வுகளினால் படுகடன் இருப்பு பாதிக்கப்படக்கூடிய தன்மையினை அதிகரிக்கக்கூடும். சலுகை ரீதியான வெளிநாட்டுக்கடன்களுடன் ஒப்பிடுகையில் இவ்வனைத்து வெளிநாட்டு நாணயக்கடன்களுடன் வர்த்தக வீதங்களுடன் ஒப்பீட்டு ரீதியில் குறைந்த முதிர்ச்சிகளையும் கொண்டிருப்பதனால் இந்நிதிகளை உயர்ந்த உற்பத்தியாக்கம் கொண்ட செயற்றிட்டங்களில் முதலீடு செய்வது முன்மதியுடையதாக இருக்குமென்பதுடன் இவ்வர்த்தகக் கடன்பாடுகளை மீளச் செலுத்துவதில் அரசாங்கத்தின் இறை மற்றும் படுகடன் உறுதித்தன்மைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படாது. இது தொடர்பாக மிகத் தேவையான முக்கிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஆற்றல் வாய்ந்த மாற்று நிதியிடல் பொறிமுறையொன்றாக அரச - தனியார் பங்குடமையினை ஊக்குவிப்பது பற்றி அரசாங்கம் தீவிரமாக பரிசீலித்தல் வேண்டும். பல அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் நீண்டகால உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுக்குட்பட்டு நிதியிடுவதற்கும், நீண்டகால செயற்றிட்டங்களுடன் இணைந்துள்ள இடர்நேர்வுகளை பன்முகப்படுத்துவதற்கும் தனியார்துறையின் வினைத்திறனையும் முகாமைத்துவ இயலாற்றலையும் பயன்படுத்திக் கொள்வதற்குமானதொரு பொறிமுறையாக உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் அரச தனியார் பங்குடமையினை அதிகரித்தளவில் உருவாக்கி வருகின்றன. ஏற்றுமதிக் கொடுகடன் வசதிகளின் உண்மைச் செலவுகள் கடன் வழங்கல் நாடுகளினால் வழங்கப்பட்ட வெளிப்படையாகக் குறைந்த வட்டி வீதங்களிலும் பார்க்க மிக உயர்வாக இருப்பதனால் இருபுடை கடன் வழங்குநர்களினால் வழங்கப்பட்ட அத்தகைய கடன்களின் மறைமுகச் செலவு பற்றி மனதில் கொள்வது மிக முக்கியமானதாகும். ஏனெனில், பெரும்பாலும் அடிக்கடி அத்தகைய வசதிகளின் கீழ் இக்கடன்களில் பெரும்பங்கு குறிப்பிட்ட நிறுவனங்கள் அல்லது கடன் வழங்கும் நாடுகளிலிருந்து பொருட்களையும் பணிகளையும் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்தப்படுவதனால் இது கடன்படும் நாடுகளை போட்டித்தன்மை மிக்க பன்னாட்டு விலைக் கோரல்களினூடாக பெறும் நன்மைகளிலிருந்தும் தடுத்து விடுகின்றது. இன்னும் சில விடயங்களைப் பொறுத்த வரையில், இவ் வசதிகளும் கூட தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித்திட்டம், காப்புறுதிக்கட்டணம், முகாமைத்துவக் கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் போன்ற தேவையற்ற வடிவங்களிலமைந்த மறைமுகக் கட்டணங்களைக் கொண்டிருக்கின்றது.

**சிறப்புக் குறிப்பு 7**

## குடிபெயர்ந்த இலங்கைத் தொழிலாளர்களிடமிருந்தான பண அனுப்புதல்களை உயர்த்துவதற்கான தேவைப்பாடு

நாட்டிற்கான வெளிநாட்டு செலாவணி உட்பாய்ச்சலுக்கான ஓர் பிரதானமான மூலமாக தொழிலாளர் பண அனுப்புதல்கள் காணப்படுகின்றன. எண்ணெய் உற்பத்தி நாடுகளின் எண்ணெய் வருமானத்தில் ஏற்பட்ட உயர்வு மற்றும் சுனாமி அனர்த்தத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட தாக்கம் போன்றவற்றால் 2005 மற்றும் 2006 காலப்பகுதியில் பண அனுப்பல்கள் ஓர் உயர் வீதத்தால் வளர்ச்சியடைய ஆரம்பித்தது. இத்தகைய அதிகரித்த உட்பாய்ச்சல்கள் 2005 மற்றும் 2006இல் ஏறத்தாள 70 சதவீதமான வர்த்தக பற்றாக்குறைக்கு நிதியிடவும், நடைமுறை கணக்கு பற்றாக்குறையை கட்டுப்படுத்தவும் உதவியது. தொழிலாளர் பண அனுப்புதல்களின் பொருளாதார முக்கியத்துவம் கருதி (மத்திய வங்கி ஆண்டறிக்கை 2005இன் சிறப்புக்குறிப்பு-10 ஐப் பார்க்கவும்) பண அனுப்புதல்களை மேலும் உயர்த்தும் நோக்குடன் 2006 காலப் பகுதியில் மத்திய வங்கி பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்தது.

### தொழிலாளர் பண அனுப்பலை உயர்த்துவதற்கான வழிமுறைகள்

2006இல் மத்திய வங்கியானது வர்த்தக வங்கிகள், உரிமை பெற்ற வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களுடைய அமைப்பு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் போன்றவற்றுடன் இணைந்து பண அனுப்புதல்கள் தொடர்பில் குடிபெயர்ந்த தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் மற்றும் பண அனுப்புதல்களை திரட்டிக் கொள்வதில் வங்கிகளால் எதிர் நோக்கப்படும் பிரச்சனைகள் என்பவற்றை அடையாளம் காணும் பொருட்டு பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்தது. வர்த்தக வங்கிகளால் வழங்கப்படும் நன்மைகள் பற்றிய போதிய அறிவைக் கொண்டிராமை குடிபெயர்ந்த தொழிலாளார்களால் எதிர் கொள்ளப்படும் ஒரு முக்கிய பிரச்சனையாகக் காணப்படுகிறது. மேலும் மத்திய வங்கியின் ஆலோசனையுடன் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்கள் ஆகியோர் தொழில் வழங்கும் நாடுகளிலுள்ள இலங்கையைச் சேர்ந்த குடிபெயர்ந்தவர்கள், இலங்கையிலுள்ள அவர்களின் பயனாளிகள் மற்றும் குடிபெயர எதிர்பார்த்திருப்போர் போன்றோருக்கு வங்கிகளால் வழங்கப்படும் வசதிகள் மற்றும் அவர்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள நன்மைகள் என்பன தொடர்பில் அறிவூட்டத் தொடங்கியுள்ளன. அதேவேளை தொழிலாளர் பண அனுப்புதல்களுடைய பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கமானது பண அனுப்புதலுக்கான சட்ட ரீதியான வழிமுறைகளைப் பயன்படுத்துவதற்கு குடிபெயர்ந்த தொழிலாளர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் பிரச்சனை ஆராய்வதற்கும் பொருத்தமான கொள்கைகளையும் பொறிமுறையினையும் விதந்துரைப்பதற்கும் என ஓர் உயர்மட்டக் குழுவை நியமித்தது.

வேறுபட்ட ஏனைய நடவடிக்கைகளுக்கான தேவைகளும் உறுதியாக உணரப்பட்டது. அவை மொழிப்பயிற்சி, வீட்டு பாவனைக்குரிய இலத்திரனியல் சாதனங்களைக் கையாளல்களுக்கான பயிற்சி, தொழில் சந்தையினைப் பன்முகப்படுத்தல், நீண்ட கால வேலை வாய்ப்பு ஒப்பந்தங்களுக்கான ஏற்பாடுகள் மற்றும் இலங்கையர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதில் அரசாங்கத்தின் நேரடி ஈடுபாடு போன்றனவாகும். கிழக்காசிய மற்றும் மத்திய கிழக்கிலுள்ள வேலை வழங்கும் நாடுகளில் குடிபெயர்ந்தவர்களுக்கான சராசரி கூலிகளை அதிகரிப்பதனை ஊக்கப்படுத்தும் முகமாக போதுமான முயற்சியை எடுப்பது அவசியம். மேலும், இலங்கையிலுள்ள தீர்வையற்ற கடைகளிலிருந்து பொருட்களை கொள்வனவு செய்வதற்கான தீர்வையற்ற படிகளின் கிடைப்பனவுகளின் நன்மை பற்றி அறிவூட்டல்களை உருவாக்கல், தீர்வையற்ற படிகளுக்கான காலப்பகுதியை நீடித்தல் என்பனவும் குடிபெயர்ந்த தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படும் பண அனுப்புதல்களை உயர்த்துவதற்கு அவசியம் என உணரப்படுகிறது. தீர்வையற்ற படிகள், வீடமைப்புக் கடன்கள், நாட்டிற்குத் திரும்பிய பின்னர் சுய தொழிலை ஆரம்பிப்பதற்கான உதவிகள் போன்ற ஊக்குவிப்புக்களை பண அனுப்புதல் தொகைகளுடன் தொடர்புபடுத்துவதன் மூலமும் வங்கித்தொழில் மூலமான பண அனுப்புதல்களை ஊக்கப்படுத்தலாம். குறித்த வங்கிகளுடாக பணம் அனுப்பப்படும் என்ற ஒப்பந்தத்துடன் பயணம் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகளுக்காக கடன் வசதிகளை வழங்குவதன் மூலம் வங்கித்தொழில் மூலங்களுடாக பணம் அனுப்பப்படுவதனை ஊக்கப்படுத்தலாம். அதேநேரம் வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர்களை அவர்களுடைய பங்களிப்புக்களை அங்கீகரிப்பதன் மூலம் ஊக்கப்படுத்த முடியும்.

பெரும்பாலான நாடுகளில் செயற்படுவதற்கான விசாக்களை பெற்றுக்கொள்ளுதல் தொடர்பாக வர்த்தக வங்கிகளால் எதிர்நோக்கும் நெருக்கடிகள் தீர்க்கப்பட வேண்டிய தேவைகளை கொண்டுள்ளது. அதிகார பூர்வ முறைகளினூடாக பண அனுப்புதல்களை மேற்கொள்வது தொடர்பாக வர்த்தக வங்கிகளின் முயற்சியானது அலுவல்சார் ரீதியில் நாட்டிற்குள்ளேயான பண அனுப்புதல்களின் உட்பாய்ச்சல்களை உயர்த்துவது மட்டுமன்றி அத்தகைய நிதிகள் பயங்கரவாதத்திற்கு நிதியிடல் உட்பட சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதிலிருந்து தடுக்கப்படுவதனாலும் இது முக்கியத்து வமுடையதாக இருக்கிறது. இச்செயற்பாட்டினை மேலும் உயர்த்துவதற்கு உள்ளூர் வங்கிகள் பண அனுப்பல்களை விரைவாக வழங்கும் விதத்தில் பரந்த அஞ்சல் வலையமைப்பு மற்றும் கையடக்கத் தொலைபேசித் தொழில்நுட்பம் மேற்கொள்ள முடியும். அதேவேளையில், தமது சிறந்த விநியோகப் பணிகள் தொடர்பான கொடுப்பனவுகளை பயன்பாட்டாளருடன் பகிர்ந்து கொள்ள முடியும். பண அனுப்புதல்கள் குடிபெயர்ந்த தொழிலாளர்களுடைய வருமானத்துடன் நேரடியாக தொடர்புபட்டிருப்பதால் இலங்கையை விட்டகலும் குடிபெயர்பவர்களின் தேர்ச்சித் திறன் மட்டத்தில் ஓர் படிப்படியான அதிகரிப்பு காணப்படுதல் அவசியம்.

**அட்டவணை 5.10** **இலங்கையன் வெளிநாட்டுச் சொத்துக்கள் (அ)**

| உடைமையாளர் | ஐ.அ.டொலர் மில்லியன் (ஆ) | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
| 1. அரசு | 46 | 55 | 95 | 131 | 128 | 4,424 | 5,320 | 9,897 | 13,417 | 13,789 |
| 2. அரச முகவர்கள் | - | - | - | - | - | - | - | - | - | - |
| 3. மத்திய வங்கி | 1,654 | 2,274 | 2,101 | 2,604 | 2,709 | 160,018 | 219,984 | 219,795 | 265,873 | 291,747 |
| 4. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் | 1,700 | 2,329 | 2,196 | 2,735 | 2,837 | 164,442 | 225,304 | 229,693 | 279,290 | 305,536 |
| 5. வர்த்தக வங்கிகள் | 795 | 889 | 1,243 | 1,466 | 1,169 | 76,921 | 86,011 | 129,987 | 149,656 | 125,867 |
| 6. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | 2,495 | 13,218 | 3,438 | 4,201 | 4,201 | 241,364 | 311,315 | 359,680 | 428,946 | 431,403 |
| 7. மொத்த அலுவல்சார் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 7.1 வணிக இறக்குமதிகள் | 3.3 | 4.2 | 3.3 | 3.7 | 3.3 | | | | | |
| 7.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதி | 2.9 | 3.6 | 2.9 | 3.3 | 2.9 | | | | | |
| 8. மொத்தச் சொத்துக்கள் - மாதத்தில் | | | | | | | | | | |
| 8.1 வணிக இறக்குமதிகள் | 4.9 | 5.8 | 5.2 | 5.7 | 4.7 | | | | | |
| 8.2 பொருட்கள் பணிகளின் இறக்குமதிகள் | 4.2 | 5.0 | 4.5 | 5.0 | 4.1 | | | | | |

(அ) 2002இன் பின்னரான ஒதுக்கங்கள் சந்தை விலையில் கணிக்கப்பட்டுள்ளன.

மூலம்: இலங்கை மத்திய வங்கி


(ஆ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணய நிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு இறுதி வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 |
|---|---|---|---|---|---|
| ஐ.அ.டொலர் ஒன்றுக்கு ரூபா | 96.75 | 96.74 | 104.61 | 102.12 | 107.71 |

## தனியார் துறைக்கான கடன் மூலதனம்

**2006இல் தனியார் துறை மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கான நீண்டகால கடன்களின் உட்பாய்ச்சல் வீழ்ச்சியடைந்துள்ளது.** ஒப்பீட்டு ரீதியில் குறைந்த வட்டி வீதங்களில் உள்நாட்டுச் சந்தையில் கொடுகடன் கிடைக்கத்தக்கதாக இருந்தமையும் உயர்ந்த பன்னாட்டு சந்தை வீதங்களும் 2006இன் முதல் அரைப் பகுதியில் தனியார் துறையின் வெளிநாட்டுக் கடன்பாடுகளை ஊக்கமிழக்கச் செய்திருந்தது. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கான வெளிநாட்டுக் கடன்களை உத்தரவாதப்படுத்துவதனை அரசாங்கம் கட்டுப்படுத்திக் கொண்டமையும் இக்குறைந்த பகிர்ந்தளிப்பிற்கு பங்களித்திருக்கலாம். மேலும், சில முதலீட்டாளர்கள் தற்போது நிலவும் பாதுகாப்பு நிலைமைகளிலிருந்து எழும் கரிசனைகளின் காரணமாக நடுத்தர மற்றும் நீண்டகால முதலீடுகளை மேற்கொள்ளாமல் பொறுத்திருந்து பார்க்கும் மன இயல்பைக் கொண்டிருப்பதும் 2006இல் வெளிநாட்டு நிதியிடலுக்கான கேள்வியை ஓரளவிற்குக் குறைத்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம், சில முதலீட்டாளர்கள் தற்பொழுது நிலவும் பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாக, நாட்டின் பெரும்பாலான சொத்துக்கள் கழிவு விலையில் கிடைக்கத்தக்கதாக இருப்பதனையும், உட்கட்டமைப்பு வசதிகளில் எதிர்பார்க்கப்படும் விரைவான முன்னேற்றம் மற்றும் தற்போதுள்ள சொத்துக்களின் தரம் உயர்வடைவது என்பனவற்றின் விளைவாக அத்தகைய சொத்துக்கள் உயர்ந்த விலைகளை எதிர்காலத்தில் பெறும் என எதிர்பார்க்கப்படுவதனையும் உணர்ந்திருக்கிறார்கள். இத்தகைய பின்னணியில் பல முதலீட்டாளர்கள் எதிர்காலத்தில் கணிசமான நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் அவர்களது முதலீடுகளை விரிவாக்கிக் கொள்வதற்கு தற்போதைய நிலைமையினைப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என நம்புகிறார்கள்.

**வரைபடம் 5.11** **வங்கிகளுக்கிடையேயான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் 2003-2006**




## குறுங்கால மூலதனம்

**மொத்தத் தேறிய குறுங்கால தனியார் மூலதன உட்பாய்ச்சல் 2005இன் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட ஐ.அ.டொலர் 176 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2006இல் ஐ.அ.டொலர் 610 மில்லியனை அடைந்தமைக்கு இலங்கை அபிவிருத்தி முறிகளில் செய்யப்பட்ட முதலீடுகளில் காணப்பட்ட கணிசமான அதிகரிப்பும் வர்த்தக வங்கிகளின் உள்நாட்டு வெளிநாட்டு நாணய கடன் வழங்கல்களுமே காரணங்களாகும்.** இவ்வாண்டுக் காலத்தில் சொத்துப்பட்டியல் முதலீடுகளின் பேரிலான உட்பாய்ச்சல்களும் வெளிப்பாய்ச்சல்களும் அதிகரித்து 2006இல் ஐ.அ.டொலர் 51 மில்லியன் கொண்ட குறைந்தளவு தேறிய உட்பாய்ச்சலை விளைவித்தது. கொழும்பு பங்குகள் பரிவர்த்தன நிலையம் ஆசியாவிலேயே மிகச் சிறந்த செயலாற்றத்தினைக் கொண்ட சந்தைகளில் ஒன்றாக தொடர்ந்தும் விளங்கியதுடன் 2005இன் ஐ.அ.டொலர் 276 மில்லியனுடன் ஒப்பிடுகையில் 2006இல் ஐ.அ.டொலர் 355 மில்லியன் கொண்ட மொத்த உட்பாய்ச்சலைக் கவர்ந்தது. 2006இல் வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் கணிசமாக வீழ்ச்சியடைந்தமைக்கு அரசிற்கான அதிகரித்த வெளிநாட்டு நாணயக் கடன் வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியும் வர்த்தக வங்கிகளினால் பெறப்பட்ட புதிய வெளிநாட்டு கடன்களின் விளைவாக வெளிநாட்டு நாணய பொறுப்புக்களில் ஏற்பட்ட உயர்வினதும் இணைந்த தாக்கமே காரணமாகும்.

## சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்குகளும்

**மூலதன மற்றும் நிதியியல் கணக்கிற்கான தேறிய உட்பாய்ச்சல்கள் விரிவடைந்த நடைமுறைக்கணக்குப் பற்றாக்குறையினை எதிரீடு செய்ய வேண்டிய அளவிற்கும் கூடுதலாக இருந்தமையினால் சென்மதி நிலுவையானது 2006இல் ஐ.அ.டொலர் 204 மில்லியன் கொண்ட**

## அட்டவணை 5.11

## வெளிநின்ற வெளிநாட்டுப்படுகடனும் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்களும்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(அ) | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(அ) |
| **1. நடுத்தர, நீண்டகாலப்படுகடன்** | 8,732 | 10,116 | 10,699 | 10,690 | 11,497 | 844,709 | 978,556 | 1,119,155 | 1,091,644 | 1,238,302 |
| 1.1 அரசு | 7,464 | 8,812 | 9,523 | 9,354 | 10,397 | 721,956 | 852,433 | 996,203 | 955,207 | 1,119,858 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான அரச கூட்டுத்தாபனங்களும் தனியார்துறையும் | 689 | 602 | 507 | 567 | 461 | 66,663 | 58,251 | 52,986 | 57,912 | 49,662 |
| 1.3 அரச உத்தரவாதமற்ற அரச கூட்டுத்தாபனங்களும் தனியார்துறையும் | 293 | 334 | 411 | 388 | 394 | 28,303 | 32,319 | 42,944 | 39,588 | 34,507 |
| 1.4 பன்னாட்டு நாணய நிதிய எடுப்பனவுகள் | 287 | 368 | 258 | 381 | 244 | 27,787 | 35,552 | 27,023 | 38,937 | 26,316 |
| **2. குறுங்காலக் கடன்** | 601 | 620 | 647 | 664 | 679 | 58,116 | 59,935 | 67,726 | 67,759 | 68,286 |
| 2.1 அரசு | - | - | - | - | - | - | - | - | - | - |
| 2.2 ஏனையவை(இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனமும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களும் (ஆ) | 601 | 620 | 647 | 664 | 679 | 58,116 | 59,935 | 67,726 | 67,759 | 68,286 |
| **3. வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் (இ)** | 1,001 | 1,046 | 1,429 | 1,666 | 1,994 | 96,807 | 101,149 | 149,492 | 170,170 | 214,802 |
| 3.1 மத்திய வங்கி | 1 | - | 1 | 1 | 3 | 123 | 32 | 128 | 131 | 284 |
| 3.2 வர்த்தக வங்கி | 865 | 863 | 1,066 | 1,388 | 1,681 | 83,655 | 83,514 | 111,464 | 141,753 | 181,040 |
| 3.3 ஆ.தீ.ஒ. பொறுப்புக்கள் | 135 | 182 | 362 | 277 | 311 | 13,029 | 17,604 | 37,899 | 28,286 | 33,478 |
| **4. மொத்த வெளிநாட்டுப்படுகடன் (1+2)** | 9,333 | 10,735 | 11,289 | 11,354 | 12,131 | 902,825 | 1,038,491 | 1,186,881 | 1,159,403 | 1,306,588 |
| **5. மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் (1+2+3)** | 10,334 | 11,781 | 12,775 | 13,020 | 14,125 | 999,632 | 1,139,640 | 1,336,373 | 1,329,573 | 1,521,389 |
| **ஒப்பந்தக் குறிப்பு விடயங்கள்** | | | | | | | | | | |
| **நடுத்தர மற்றும் நீண்டகாலப்படுகடன்** | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக்கடன்கள் | 4,358 | 6,961 | 7,702 | 7,416 | 8,071 | 421,637 | 673,432 | 805,646 | 757,262 | 869,336 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் | 3,048 | 1,726 | 1,763 | 1,655 | 1,959 | 294,880 | 167,007 | 184,467 | 169,038 | 210,986 |
| (3) நிரம்பலாளர் கொடுகடன் | 100 | 218 | 240 | 283 | 355 | 9,718 | 21,048 | 25,123 | 28,907 | 38,242 |
| (4) ப.நா.நி. எடுப்பனவுகள் | 287 | 368 | 258 | 381 | 244 | 27,787 | 35,552 | 27,023 | 38,937 | 26,316 |
| (5) ஏனைய கடன்கள் (ஈ) | 939 | 843 | 635 | 955 | 867 | 90,686 | 81,516 | 76,896 | 97,500 | 93,422 |
| **குறுகியகாலப்படுகடனும் வங்கித் துறைப் பொறுப்புக்களும்** | 1,602 | 1,665 | 2,077 | 2,330 | 2,628 | 154,923 | 161,084 | 217,217 | 237,929 | 283,088 |
| **மொ.உ.உ.வின் சதவீதமாக** | | | | | | | | | | |
| மொத்த வெளிநாட்டுப்படுகடன் | 56.3 | 58.9 | 56.6 | 48.2 | 45.0 | 57.0 | 59.0 | 58.5 | 49.0 | 46.6 |
| மொத்த வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்கள் | 6.0 | 5.7 | 7.1 | 7.1 | 7.4 | 6.1 | 5.7 | 7.4 | 7.2 | 7.7 |
| மொத்த வெளிநாட்டுப் படுகடனும் பொறுப்புக்களும் | 62.4 | 64.6 | 63.7 | 55.3 | 52.4 | 63.1 | 64.7 | 65.9 | 56.2 | 54.3 |
| குறுங்காலப்படுகடன் | 3.6 | 3.4 | 3.2 | 2.8 | 2.4 | 3.7 | 3.4 | 3.3 | 2.9 | 2.4 |
| குறுங்காலப்படுகடனும் வங்கித்துறை வெளிநாட்டுப் பொறுப்புக்களும் | 9.7 | 9.1 | 10.4 | 9.9 | 9.7 | 9.8 | 9.2 | 10.7 | 10.1 | 10.1 |
| **மொத்தப்படுகடனினதும் பொறுப்புக்களினதும் சதவீதமாக** | | | | | | | | | | |
| குறுங்காலப்படுகடன் | 5.8 | 5.3 | 5.1 | 5.1 | 4.5 | 5.8 | 5.3 | 5.1 | 5.1 | 4.5 |
| குறுங்காலப் பொறுப்புக்கள் | 9.7 | 8.9 | 11.2 | 12.8 | 14.1 | 9.7 | 9.0 | 11.2 | 12.8 | 14 .1 |
| அலுவல்சார் ஒதுக்கின் சதவீதமாக குறுங்காலப்படுகடன் | 35.3 | 26.6 | 29.5 | 24.3 | 22.4 | 35.3 | 26.6 | 29.5 | 24.3 | 24.4 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் ஏனைய வர்த்தகக் கொடுகடன்களையும் உள்ளடக்குகின்றது

(இ) ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பற்றுக்களும் அந்நியச் செலாவணி வங்கிக்கூறுகள் உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள்

(ஈ) பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் தனியார்துறை நிறுவனங்களினதும் நீண்டகாலக் கடன்களை உள்ளடக்கியது

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி, வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

அட்டவணை 5.12 வெளிநாட்டுப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள்

| விடயம் | ஐ.அ.டொலர் மில்லியன் | | | | | ரூபா மில்லியன் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2002 | 2003 | 2004 | 2005 | 2006(அ) | 2002 | 2003 | 2004 | 2005 | 2006 (அ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் | 788 | 761 | 843 | 623 | 1,079 | 74,704 | 73,125 | 85,318 | 62,577 | 112,599 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் | 572 | 526 | 594 | 419 | 759 | 54,006 | 50,502 | 59,990 | 42,075 | 79,227 |
| (i) ப.நா.நிதியத்திற்கு | 56 | 32 | 107 | 39 | 144 | 4,647 | 2,869 | 10,718 | 3,902 | 15,276 |
| (ii) ஏனையவற்றிற்கு | 516 | 493 | 487 | 380 | 615 | 49,359 | 47,632 | 49,272 | 38,173 | 63,951 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் | 216 | 235 | 249 | 204 | 321 | 20,698 | 22,623 | 25,328 | 20,502 | 33,372 |
| (i) ப.நா. நிதியத்திற்கு | 4 | 4 | 10 | 10 | 14 | 398 | 414 | 988 | 973 | 1,452 |
| (ii) ஏனையவற்றிற்கு | 212 | 230 | 240 | 194 | 307 | 20,300 | 22,209 | 24,340 | 19,530 | 31,920 |
| 2. வணிக ஏற்றுமதிகள் மற்றும் பணிகளிலிருந்தான வருவாய்கள் | 5,967 | 6,544 | 7,284 | 7,887 | 8,508 | 571,195 | 631,549 | 738,714 | 793,153 | 885,380 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள், பணிகள் தனியார் மாற்றல்களில் இலிருந்தான பெறுகைகள் | 7,330 | 8,127 | 9,004 | 9,891 | 11,144 | 701,579 | 784,408 | 912,817 | 994,751 | 1,159,756 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (ஆ) | | | | | | | | | | |
| 4.1 மேலுள்ள 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 13.2 | 11.6 | 11.6 | 7.9 | 12.7 | 13.1 | 11.6 | 11.5 | 7.9 | 12.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 12.2 | 11.1 | 10.0 | 7.3 | 10.8 | 12.2 | 11.1 | 10.0 | 7.3 | 10.8 |
| 4.2 மேலுள்ள 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் | 10.8 | 9.4 | 9.4 | 6.3 | 9.7 | 10.6 | 9.3 | 9.3 | 6.3 | 9.7 |
| (ii) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் நீங்கலாக | 9.9 | 8.9 | 8.1 | 5.8 | 8.3 | 9.9 | 8.9 | 8.1 | 5.8 | 8.3 |
| 5. அரசபடுகடன் பணிக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 5.1 அரச படுகடன் பணிக் கொடுப்பனவுகள் (இ) | 522 | 502 | 484 | 268 | 610 | 49,928 | 48,452 | 48,952 | 26,927 | 63,369 |
| 5.2 மேலுள்ள 1இன் சதவீதமாக | 66.2 | 66.0 | 57.4 | 43.0 | 56.5 | 66.8 | 66.3 | 57.4 | 43.0 | 56.3 |

(அ) தற்காலிகமானவை

(ஆ) ரூபாப் பெறுமதியிலும் ஐ.அ.டொலர் பெறுமதியிலும் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

(இ) ப.நா.நி. கொடுக்கல் வாங்கல் தவிர்த்து


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**மிகையினைப் பதிவு செய்தது.**

## வெளிநாட்டு ஒதுக்குகள்

**செலமதி நிலுவை மிகையானது தொடர்ந்து இரண்டாவதாண்டாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகளை வலுப்படுத்தியது.** ப.நா.நிதியத்திற்கு உயர்ந்த படுகடன் மீள்கொடுப்பனவுகள் காணப்பட்ட போதும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் நீங்கலாக மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் அதிகரித்தன. எனினும், இறக்குமதி உள்ளடக்க நியதிகளில் 2005இன் 3.3 மாதங்களுக்கான இறக்குமதிகளிலிருந்து 2006இல் 3 மாத இறக்குமதிகளுக்கு வீழ்ச்சியடைந்தமைக்கு 2006இன் உயர்ந்த

வரைபடம் 5.8 காலாண்டு வெளிநாட்டுச் சொத்துக்கள்





இறக்குமதிச் செலவினமே முக்கிய காரணமாகும். அதேவேளை குறுங்கால படுகடன் மற்றும் பொறுப்புக்களுக்கான மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் விகிதத்தினால் அளவிடப்பட்டவாறு ஒதுக்குப் போதுமை 2005இன் 84 சதவீதத்திலிருந்து 2006இல் 92 சதவீதத்திற்கு மேம்பட்டது. குறிப்பிட்ட முன்னேற்ற நிலை இல்லாத போதிலும் ஆசிய தீர்ப்பனவு ஒன்றிய பெறுகைகள் நீங்கலாக, நாட்டின் மொத்த வெளிநாட்டு ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தமைக்கு, இறக்குமதி நிதியிடலுக்கான மிகைக் கேள்வியை ஈடு செய்ய வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## 5.6 வெளிநாட்டுப் படுகடனும் படுகடன் பணிகளும்

### வெளிநாட்டுப் படுகடன்

**2006 நாட்டின் மொத்த வெளிநாட்டுப் படுகடனானது மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து நாட்டின் படுகடன் உறுதித்தன்மையில் மேலும் முன்னேற்றத்தினைப் பிரதிபலித்தமைக்கு வெளியீட்டின் உயர்ந்த வளர்ச்சியே முக்கிய காரணமாக இருந்தது.** இதன்படி, மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2005இன் 48.2 சதவீதத்திலிருந்து 2006இல் 45.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. ஐ.அ.டொலர் நியதிகளில், மொத்த வெளிநாட்டுப் படுகடன் 2006இல் ஏறத்தாள 7.8 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 12,235 மில்லியனுக்கு அதிகரித்தமைக்கு அரசிற்கான கடன் பகிர்ந்தளிப்புக்கள் அதிகரித்தமையும், முக்கிய நாணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலர் தேய்வடைந்தமையும் காரணங்களாகும். வெளிநின்ற மொத்த வெளிநாட்டுப்படுகடனில் ஏறத்தாள 42 சதவீதக் கடன்கள் சிஈஉ இலும் ஏறத்தாள 30 சதவீதம் யப்பானிய யென்னிலும் குறித்துரைக்கப்பட்டிருந்தன. அதேவேளை ஆசியத் தீர்ப்பனவு ஒன்றியத்தின் பொறுப்புக்களையும் வர்த்தக வங்கிகளினதும் பொறுப்புக்களையும் உள்ளடக்கிய மொத்த

வரைபடம் 5.9 வெளிநாட்டுப் படுகடன்




வெளிநாட்டுப் படுகடனும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக 52.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. சில வர்த்தக வங்கிகள் வெளிநாட்டுக் கடன்களைத் திரட்டியதன் காரணமாக, 2006 இறுதியில் வங்கித் தொழில்துறையின் வெளிநாட்டுப் பொறுப்புக்கள் ஏறத்தாள 20 சதவீதத்தினால் ஐ.அ.டொலா் 1,994 மில்லியனிற்கு அதிகரித்தது.

**மொத்த நடுத்தர, நீண்டகால படுகடனில், அரச படுகடன் 90 சதவீதத்திற்கு வகை கூறுவதுடன் எஞ்சிய 10 சதவீதத்தினை தனியார் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் துறைகளினது கடன்பாடுகளும் ப.நா.நிதியத்திற்கான படுகடன் கடப்பாடுகளும் கொண்டிருந்தன.** இது நாட்டிற்குள் வெளிநாட்டுக்கடன் மூலதனத்தினைக் கவா்வதில் அரசாங்கம் தொடா்ந்தும் ஆதிக்கம் செலுத்தி வருவதனையும் வெளிநாட்டுப் படுகடன்களைத் திரட்டுவதில் தனியார் துறைக்குள்ள வரையறைகளையும் பிரதிபலிக்கிறது. நிதியியல் ரீதியில் ஆற்றல் வாய்ந்த தனியார் துறை தொழில்முயற்சிகள் அவற்றின் முதலீடுகளுக்கு நடுத்தர மற்றும் நீண்டகால வெளிநாட்டு மூலதனங்களைத் திரட்டுவதற்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். இது, வெளிநாட்டுப் படுகடனைத் திரட்டுவதற்கு ஆற்றலற்ற தனியார்துறை தொழில் முயற்சிகளுக்கும் உள்நாட்டு நிதியியல் மூலவளங்களை விடுவிக்கும். அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் இருப்பில் சலுகை ரீதியான படுகடன் 96 சதவீதத்திற்கு வகை கூறியது.

### வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள்

**கடன்களைச் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதத்தின் பயனாக 2005இல் படுகடன் தீர்ப்பனவில் ஒரே ஒரு முறை செய்யப்பட்ட குறைப்பினைத் தொடர்ந்து, படுகடன் பணிக் கொடுப்பனவுகள் சுனாமிக்கு முன்னைய மட்டங்களுக்கு மீண்டும் வந்தன.** அனைத்து வெளிநாட்டு படுகடன்களின் மீதுமான கடன் தீர்ப்பனவு மற்றும் வட்டிக் கொடுப்பனவு இரண்டினையும் உள்ளடக்கிய மொத்த படுகடன் பணிக்கொடுப்பனவுகள் 2006இல் ஐ.அ.டொலா் 1,079 மில்லியனுக்கு ஏறத்தாள 73.2 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்களவிற்கு அதிகரித்தன. பாரிஸ் கழக உறுப்பினா்கள், ஜி-8 நாடுகள் மற்றும் பல்புடை கடன் வழங்கும் நிறுவனங்கள் என்பனவற்றினால் 2005இல் வழங்கப்பட்ட படுகடன் மீளச் செலுத்துவதற்கான சட்ட இசைவுத் தாமதம் முடிவடைந்தமை, 2006இல் அட்டவணையிடப்பட்ட படுகடன் மீள் கொடுப்பனவுகள் மீளத் தொடங்கியமை, பாதுகாப்புக் கடன்களின் மீள் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசாங்கத்தின் வா்த்தகக் கடன்பாடுகளின் அதிகரித்த படுகடன் பணிச் செலவு, மற்றும் சிஎஉஇற்கு கெதிராக ஐ.அ.டொலரின் தேய்வு என்பன 2006இல் ஐ.அ.டொலா் நியதிகளில் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் அதிகரிப்பதற்கு பங்களித்தன. எனினும், ஒப்பீட்டு ரீதியில் உயா்ந்த் வெளிநாட்டுப் படுகடன் இருப்புக்கள் காணப்பட்ட போதும் நாடு அதன் வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவு செய்வதற்கான அதன் இயலளவினை அளவிடுகின்ற படுகடன் பணி விகிதம் இன்னமும் வசதியான மட்டங்களிலேயே காணப்படுகின்றமைக்கு நீண்ட மீள்கொடுப்பனவுக் காலத்துடன் பெருமளவு சலுகைக்கடன்கள் காணப்பட்டமையே முக்கிய காரணமாகும்.

## 5.7 செலாவணிவீத அமைப்பும் செலாவணிவீத அசைவுகளும்

**சந்தையில் காணப்படக்கூடிய மிகையான ஏற்றத்தாழ்வுகளைத் தணிக்கின்ற மட்டுப்படுத்தப்பட்ட தலையீடுகளுடன் செலாவணி வீதங்களை நிர்ணயிப்பதற்கு சந்தை விசைகளை அனுமதிக்கின்ற இலங்கையின் சுதந்திரமாக மிதக்க விடுகின்ற செலாவணிவீத அமைப்பு 2006ஆம் ஆண்டிலும் தொடர்ந்தது. இவ்வமைப்பானது 2001இல் இது பின்பற்றப்பட்டது தொடக்கம் நன்கு செயற்பட்டு வருகின்றது.** பன்னாட்டு கொடை வழங்குனா்களினால் வாக்குறுதியளிக்கப்பட்ட பெருமளவு உதவிகள் மற்றும் சுனாமியுடன் தொடா்பான உயா்ந்தளவு வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் என்பனவற்றின் பின்னணியில் முக்கிய பன்னாட்டு நாணயங்களுக்கெதிராக 2005இல் உயா்வடைந்த ரூபா மீண்டும் அதன் பழைய நிலையான 2006இல் தேய்வடையும் போக்கிற்கு மாறியது. ரூபாவானது ஐ.அ.டொலா் (5.2 சதவீதம்), யப்பான யென் (4.3 சதவீதம்) மற்றும் இந்திய ரூபா (7.2 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக மிதமான வீதத்தில் தேய்வடைந்த வேளையில் இசுடோ்லிங் பவுண் (16.7 சதவீதம்) மற்றும் யூரோ (14.6 சதவீதம்) என்பனவற்றிற்கெதிராக உயா்ந்த வீதத்தில் தேய்வடைந்தமைக்கு 2006ஆம் ஆண்டுப் பகுதியில் இந் நாயணயங்களுக்கெதிராக ஐ.அ.டொலா் நலிவுற்றமையே முக்கிய காரணமாகும்.

**கணிசமான உயா்ந்த இறக்குமதிகள் இலங்கையின் வா்த்தக பங்காளா்கள் மற்றும் போட்டி நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் நிலவிய ஒப்பீட்டு ரீதியில் உயா்ந்த உள்நாட்டு பணவீக்கம் என்பனவற்றின் காரணமாக பாரிய நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை தேய்வினை ஏற்படுத்தும் விதத்தில் செலாவணி வீதத்தின் மீது அழுத்தத்தினை ஏற்படுத்தியது.** எனினும், அதிகரித்த தொழிலாளா் பணவனுப்பல்கள், முன்னெப்பொழுதுமில்லாத அளவில் அதிகரித்த வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல், வா்த்தகக் கடன்பாடுகள் உட்பட அரசிற்கான உயா்ந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல் என்பன 2006இல் திரண்ட சென்மதி நிலுவை மிகையினைத் தோற்றுவித்ததுடன் சந்தை நம்பிக்கையினையும் மேம்படுத்தியதன் மூலம் 2006இன் இறுதியில் ரூபாவின் மிகையான தேய்வுப் போக்கு இல்லாமல் போயிற்று.

### பெயரளவு மற்றும் உண்மைத்தாக்கமுள்ள செலாவணி வீதங்கள்

**2006இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமானது 2005இல் காணப்பட்ட உயா்வடைந்த போக்கிற்கு மாறாக தேய்வடைந்த வேளையில் உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் அதே போக்கில் தொடா்ந்தும் காணப்பட்டது.** முக்கியமான நாணயங்களுக்கெதிராக இலங்கை ரூபாவின் உயா்ந்த பெயரளவு தேய்வினைப் பிரதிபலிக்கும் விதத்தில் 5 நாணயங்கள் மற்றும் 24 நாணய கூடைகள் இரண்டினையும் அடிப்படையாகக் கொண்ட இலங்கை ரூபாவின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 2006இல் தேய்வடைந்தது. அதேவேளை, செலாவணிவீத வேறுபாடுகளுக்கு மேலதிகமாக, நாடுகளிடையேயான பணவீக்க வேறுபாடுகளைக் கவனத்தில் கொள்கின்ற உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் 2006இல் உயா்வடைந்த இலங்கையின் ஏற்றுமதிகளின் போட்டித்தன்மையில் ஏற்பட்ட மோசமான தன்மையினை எடுத்துக் காட்டியது. இது, வா்த்தகப் பங்காளா்கள் மற்றும் போட்டி நாடுகளின் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியில் உயா்ந்த உள்நாட்டு பணவீக்கத்திற்குக் காரணமாக இருந்திருக்கும்.

**அட்டவணை 5.13** — செலாவணிவீத அசைவுகள்



| நாணயம் | வெளிநாட்டு நாணய அலகு ஒன்றிற்கு ரூபா: ஆண்டு இறுதி வீதங்கள் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ): புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004 | 2005 | 2006 | 2004 | 2005 | 2006 | 2005 | 2006 | 2005 | 2006 |
| யூரோ | 142.32 | 120.96 | 141.58 | 125.79 | 125.10 | 130.63 | 17.66 | -14.56 | 0.55 | -4.24 |
| இந்திய ரூபா | 2.40 | 2.27 | 2.44 | 2.23 | 2.28 | 2.30 | 5.67 | -7.19 | -2.22 | -0.86 |
| யப்பானிய யென் | 1.02 | 0.87 | 0.91 | 0.94 | 0.91 | 0.89 | 17.53 | -4.30 | 2.33 | 2.26 |
| ஸ்டேர்லிங் பவுண் | 201.37 | 175.94 | 211.29 | 185.35 | 182.87 | 191.53 | 14.45 | -16.73 | 1.35 | -4.52 |
| ஐ.அ.டொலர் | 104.60 | 102.12 | 107.71 | 101.19 | 100.50 | 103.96 | 2.43 | -5.19 | 0.69 | -3.33 |
| சிஎஉ | 161.60 | 145.95 | 162.03 | 149.88 | 148.45 | 153.00 | 10.72 | -9.92 | 0.96 | -2.97 |

| தாக்கமுள்ள செலாவணி வீதச்சுட்டெண் (ஆ) | மாதாந்தச் சுட்டெண் | | | ஆண்டுச் சராசரி | | | முன்னைய ஆண்டைவிட சதவீத மாற்றம் (அ): புள்ளிக்குப்புள்ளி | | ஆண்டுச் சராசரி | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2004திசெ | 2005திசெ | 2006திசெ | 2004 | 2005 | 2006 | 2005 | 2006 | 2005 | 2006 |
| உ.தா.செ.வீ-24 நாணயங்கள் (1999=100) | 63.18 | 68.07 | 61.61 | 67.63 | 67.55 | 64.93 | 7.74 | -9.49 | -0.12 | -3.88 |
| பெ.தா.செ.வீ-24 நாணயங்கள் (1999=100) | 94.93 | 107.41 | 112.87 | 93.61 | 101.96 | 108.19 | 13.15 | 5.08 | 8.92 | 6.11 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி


(அ) இலங்கை ரூபாவிற்குச் சமமான வெளிநாட்டு நாணயங்களின் அடிப்படையில் மாற்றங்கள் கணிக்கப்பட்டுள்ளன. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிபிடுக்கின்றது

(ஆ) பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதமென்பது 24 வர்த்தகப் பங்காளர்கள் மற்றும் போட்டி நாடுகளின் பெயரளவுச் செலாவணி வீதத்தின் நிறையேற்றப்பட்ட சராசரியாகும். நாணயக் கூடையிலுள்ள ஒவ்வொரு நாணயத்தினதும் தொடர்பின் முக்கியத்துவத்தினை பிரதிபலிகின்ற விதத்தில் நிறைகள் இருபுடை வர்த்தகப் பங்கினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. கூடையில் உள்ளடக்கப்பட்டுள்ள நாணயங்களைக் கொண்ட நாடுகளின் பணவீக்க வேறுபாடுகளுக்காக பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதங்களை சீராக்குவதன் மூலமாக உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் கணிக்கப்படுகிறது. சய அடையாளம் பெறுமானத் தேய்வினைக் குறிப்பிடுகின்றது.

## உள்நாட்டின் வெளிநாட்டு செலாவணிச் சந்தையின் அபிவிருத்திகள்

**2006இல் வங்கிகளுக்கிடையிலான வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கை மட்டம் கணிசமாக அதிகரித்து உயர்ந்த பன்னாட்டு வர்த்தகத்தினையும் பணவனுப்பல்களின் உட்பாய்ச்சல்களையும் பிரதிபலித்தது.** வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தொழிற்படுவோரின் ஆலோசனையுடன் இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட பல வழிமுறைகளும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை மேலும் விரிவடைவதற்குப் பங்களித்தன. இவ்வாண்டுக் காலத்தில் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் நடவடிக்கைகளை விரிவாக்குவதற்காக உள்நாட்டுக் கம்பனி வாடிக்கையாளர்களுக்கு ரூபாவினை அடிப்படையாகக் கொண்ட குறுக்கு நாணய தேர்வுகளை வழங்குவதற்கு வர்த்தக வங்கிகளை அனுமதித்தது. வர்த்தக வங்கிகளினால் வாடிக்கையாளர்களுக்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை மற்றும் அவர்களிடமிருந்தான கொள்வனவு என்பனவற்றை உள்ளடக்கிய வாடிக்கையாளர் சந்தையும் நடவடிக்கை மட்டத்தில் அதிகரிப்பினைப் பதிவு செய்துள்ளது. வாடிக்கையாளர் சந்தையில் கொடுக்கல் வாங்கல்களின் மொத்த அளவு ரூபா மிதக்கவிடப்பட்ட பின்னர் மிக உயர்ந்த மட்டமொன்றினைப் பதிவு செய்ததுடன் 2005இனை விட 11 சதவீதமான அதிகரிப்பொன்றினையும் பிரதிபலித்தது. எனினும், வாடிக்கையாளர் சந்தையில் முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள்

**வரைபடம் 5.10** — செலாவணி வீத அசைவுகள்



இன்னமும் மிகச் சிறிய அளவிலேயே காணப்படுவதுடன், வெளிநாட்டுச் செலாவணி வீத இடர்நேர்வுக் காப்பீட்டிற்கு தற்போது கிடைக்கத்தக்கதாகவுள்ள சாதனங்களைப் பயன்படுத்துவது பற்றி பொதுமக்களுக்கு கூடியளவு விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டிய தேவையினையும் எடுத்துக் காட்டுகிறது.

**சென்மதி நிலுவையின் மீது உயர்ந்து செல்லும் எண்ணெய் விலைகளின் தாக்கத்தினைத் தணிக்கும் பொருட்டு எண்ணெய் இறக்குமதிக்காக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காப்பீட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு வசதியளிக்கும் விதத்திலும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் தளம்பல்களைக் குறைப்பதற்கும் மத்திய வங்கி முயற்சிகளை மேற்கொண்டது.** 2006இல் எண்ணெய் விலைகள் உயர்ந்த சாதனை மட்டத்தினை அடைந்தமையினால் எண்ணெய் இறக்குமதிகள் மீதான செலவினம் ஐ.அ.டொலர் 415 மில்லியனால் ஐ.அ.டொலர் 2,070 மில்லியனுக்கு அதிகரித்தது. இது சந்தையில் மிகையான தளம்பல்களை உருவாக்கிய வேளையில் வர்த்தகப் பற்றாக்குறையினையும் அதிகரித்தது. 2006இல் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் காப்பீட்டு பொறிமுறையில் நுழைந்திருந்தால் நாடு கணிசமான வெளிநாட்டுச் செலாவணியினை சேமிக்க முடிந்திருக்குமென்பதுடன் வர்த்தகப் பற்றாக்குறையினையும் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பல்களையும் குறைத்திருக்கும். எனவே இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 2007இன் தொடக்கத்தில் காப்பீட்டு ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு வசதியாக மத்திய வங்கி ஊக்குவிப்புக்களை வழங்க தீர்மானிக்கப்பட்டிருக்கும் அதேவேளை கூடிய விரைவில் இதனை மேற்கொள்வதுடன் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனமானது இதன் பெரும்பகுதியினை நிறைவு செய்துள்ளது. கூடிய விரைவில் இக் காப்பீட்டு சாதனங்களை அறிமுகப்படுத்துவது உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை மேலும் அபிவிருத்தி செய்யும்.

**வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையின் மிகையான தளம்பல்களை சுமூகமாக்குவதற்காகவும் அதன் வெளிநாட்டு ஒதுக்குகளை கட்டியெழுப்புவதற்காகவும் 2006 முழுவதும் மத்திய வங்கி வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் தலையிட்டது.** இது 2006இல் வங்கிகளுக்கிடையிலான சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 307 மில்லியனை ஈர்த்துக் கொண்டதுடன் 2006இல் ஐ.அ.டொலர் 791 மில்லியனை நிரம்பல் செய்தமையின் மூலம் 2006இல் ஐ.அ.டொலர் 484 மில்லியன் கொண்ட தேறிய நிரம்பல் தோற்றுவிக்கப்பட்டது. இது 2004இன் தேறிய நிரம்பலான ஐ.அ.டொலர் 515 மில்லியனை விடக் குறைவானதாகும். 2005இல் சுனாமியுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் கிடைக்கப் பெற்றமையின் காரணமாக திரண்ட நிரம்பலானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. எண்ணெய் விலைகள் வழமைக்கு மாறாக உயர்வாக இருந்த வேளையில், குறிப்பாக 2006ஆம் ஆண்டின் இரண்டாம் மற்றும் மூன்றாம் காலாண்டுப் பகுதிகளில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் உறுதிப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக மத்திய வங்கி சந்தைக்கு வெளிநாட்டுச் செலாவணியினை நிரம்பல் செய்ய வேண்டியிருந்தது.

**வரைபடம் 5.11** வங்கிகளுக்கிடையேயான முன்னோக்கிய கொடுக்கல் வாங்கல்கள் 2003-2006

